வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu






Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 07.03.2024 வியாழக்கிழமை | இதழ் : 67 | பக்கங்கள் : 12

வற் வரி திருத்த சட்டம்:

## 24 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, மார்ச் 07

பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டமூலம் 24 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 59 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை, பெறுமதி சேர் வரி, சமூக அற வீட்டு வரி உள்ளிட்ட வரி சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நடைபெற்றது. 11

## யாழ். இந்திய துணை தூதரகத்தை போராட்டங்களால் முடக்குவோம்!

வடக்கு மீனவர் கூட்டுறவு சமாசம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகம் முன்பாக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து தூதரகத்தின் செயல்பாடுகளை முடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் - இவ்வாறு எச்சரித்துள்ளார் வடக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பாக்கியநாதன் றேகன்.

யாழ். மாவட்ட மீனவ அமைப்புகளின் சம்மேளனத்தின் பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு 11

நாட்டை முன்னேற்றும் பயணத்தை

# தொடர்வதா இல்லையா? நீங்களே முடிவெடுங்கள்

## பாராளுமன்றில் ரணில் தெரிவிப்பு

- கல்வி, மருத்துவ பொருட்களுக்கு வற் வரி விலக்கு
- பொருளாதாரம் வலுவாகும்போது சலுகைகள்
- அதிகாரத்துக்காக பொய் நான் சொல்லவில்லை



கொழும்பு, மார்ச் 07

பொருளாதாரம் வலுவடைந்ததன் பலனை ஒரு நாடு என்ற வகையில் அடைவதா? இல்லாவிட்டால் இந்த நிலையிலிருந்து விலகிச் சென்று ஓரிரு வருடங்களுக்கு முன்பு இருந்ததைப் போல வங்குரோத்து நிலையை அடைவதா? என்பதை நீங்கள் முடிவு செய்யவேண்டும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

## திருக்கேதீச்சரத்துக்கு சிறப்பு பேருந்து சேவை

வடமராட்சி, மார்ச் 06

மகா சிவராத்திரி தினமான நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு சிறப்பு பேருந்து சேவைகள் நடத்தப்படவுள்ளன.

பழம்பெரும் பெருமை வாய்ந்த திருக்கேதீச்சரம் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினம் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இதில், வடமராட்சி மக்கள் பங்குபற்ற வசதியாகவே இந்த சிறப்பு சேவை பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபையால் முன்னெடுக்கப்படுகின்றது. 11

## வட, கிழக்கு விவகாரத்தில் அரசாங்கம் கள்ள மௌனம்!

தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 07

வடக்கு, கிழக்கில் மக்களின் பிரச்னைகளுக்கு பதில் அளிக்காமல் அரசாங்கம் கள்ள மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது என்று தேசிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சி நடத்திய மகளிர் தின நிகழ்வில் பங்கேற்ற தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று பேரவை உறுப்பினர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ் கின்ற மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் 11

## மாணவர் பேரணி கலைப்பு

கொழும்பு, மார்ச் 07

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கையை கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் செய்தனர்.

- புஞ்சி பொரளை பகுதியில் வைத்து நீர்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், மாணவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு முன்பாக ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இலவச கல்வியை தனியார் மயப்படுத்தும் தேசிய கல்வி கொள்கையை மீளப்பெறுமாறு 11



## விமானப் படையின் கண்காட்சி யாழில் நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், மார்ச் 07

இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் - முற்றவெளி மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

"நட்பின் சிறகுகள்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமான இந்தக் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதி வரை காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். 11

## முருகன் உள்ளிட்ட மூவரையாவது உயிருடன் விடுதலை செய்யுங்கள்

இந்தியா, இலங்கை அரசுகளிடம் சிறீதரன் எம். பி. வேண்டுகோள்!

கொழும்பு, மார்ச் 07

இந்திய சிறையில் இருக்கின்ற முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களின், குடும்பத்தோடு சேர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர், இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கை அரசிடம் கேட்கிறோம் - என்று தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார். 11

வடக்கில் சூரிய மின்கல திட்டம்:

## இந்தியா, சீனாவுக்கு அனுமதி வழங்கவில்லை!

கொழும்பு, மார்ச் 07

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் மின் உற்பத்தி அபிவிருத்தியால் அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு பகுதிகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். வடக்கில் சூரிய மின்கல திட்டத்துக்கு சீனா இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட வில்லை என்று மின்சாரத்துறை 11



# இப்படியும் நடக்கிறது

ஈழத்தமிழர் விவகாரத்தில் தமிழகம் உண்மையான செய்திகளை அறிந்துகொள்வதில்லை என்பது பற்றி நேற்று இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, நண்பர் ஒருவர் தொடர்புகொண்டு ஒரு விடயத்தை ஞாபகப் படுத்தினார்.

கடந்த ஞாயிறு அன்று வடக்கு மீனவர்கள் தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராகக் கடலில் போராட்டம் நடத்தியிருந்தனர்.

அந்தப் போராட்டத்தை நமது அரசியல் கட்சிகள் எவையும் கண்டுகொள்ளவில்லை. அது மீனவர்கள் பிரச்னை, அதற்கு அவர்களே போராடட்டும் என்று நினைத்தார்களோ தெரியவில்லை.

அந்தப் போராட்டத்தில் வடக்கின் சகல பகுதிகளிலும் இருந்து மீனவர்கள் படகுகளில் கறுப்புக் கொடிகளைக் கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் கோரிக்கை, தமிழக மீனவர்கள் அத்துமீறி நமது கடல்பரப்புக்குள் வந்து இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்றும் அவ்வாறு வருபவர்களை தடுக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான்.

அதாவது அவர்கள் கோரிக்கை வைத்தது எல்லை தாண்டி வந்து இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை கோரியே.

ஆனால், இந்தப் போராட்டம் குறித்து தமிழகத்தில் கருத்துத் தெரிவித்த இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கப் பிரதிநிதி எமரிட், கடந்த வாரம் இலங்கை சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி படகுகளில் கறுப்பு கொடி கட்டி, உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதாகக் கூறியிருந்தார்.

'இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை, இந்திய அரசை கண்டித்து மட்டும் போராட்டம் நடத்தினரே தவிர இலங்கை மீனவர்களுக்கு எதிராக இதுவரை தமிழக மீனவர்கள் போராட்டம் நடத்தியதில்லை. ஆனால், இன்று தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை மீனவர்கள் கறுப்பு கொடியுடன் கடலில் போராட்டம் நடத்தியது தமிழக மீனவர்களுக்கு வருத்தம் அளிக்கிறது,' என்று தெரிவித்திருந்தார்.

இதனைச் சுட்டிக்காட்டிய நண்பர், இலங்கை மீனவர்களும் தமிழக மீனவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தவில்லை என்றும் அத்துமீறி வருபவர்களை தடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியே போராட்டம் நடத்தினார்கள் என்று தெளிவுபடுத்திய அந்த நண்பர், எமது மீனவர்களின் கோரிக்கை நியாயமானது என்பதைத் தமிழக மீனவர்களுக்கு இன்னமும் யாரும் எடுத்துச் சொல்லவில்லையே என்று ஆதங்கப்பட்டார்.

கச்சதீவுக்கு உரிமை கொண்டாடும் தமிழக மீனவர்கள் அது இந்தியாவுக்கு சொந்தமானதாக இருந்தாலும், பருத்தித்துறை கரைவரை வருவோம் என்று அடம்பிடிப்பதை எந்த விதத்தில் நியாயப்படுத்துகின்றார்கள் என்பது தெரியவில்லை. கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தமானதாக இருந்தாலும் அது பருத்தித்துறைவரை நீண்டுவிடாது.

இன்று கச்சதீவும் இலங்கைக்கு சொந்தமானது என்கின்ற வரை - சர்வதேச கடல் எல்லை வரை வருவதையாரும் தடுக்கப்போவதில்லை. ஆனால், அதனைத் தாண்டுகின்றபோது, அதுவும் இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்ட கடலில் அந்த நாட்டுச்சட்டங்களே அமுலில் இருக்கின்ற ஒரு பகுதியில், அங்கு வருவது- அதாவது எல்லை தண்டுவதே குற்றமாகப் பார்க்கப்பட வேண்டிய இடத்தில், இங்கு தடை செய்யப்பட்ட மீன்பிடிப்பில் ஈடுபடுவதை அனுமதிக்கக் கோருவது தவறானது என்பதை இன்று வரை தமிழ்கத்தில் உள்ள எவரும் சுட்டிக்காட்டியதாகத் தெரியவில்லை.

தமது மீனவர்களை பகைத்துக்கொள்ள தமிழக அரசியல்வாதிகள் தயாராக இல்லாதபோது, நமது மீனவர்களின் நலனைக் கண்டுகொள்ளாமல் நமது தலைவர்கள் அமைதியாக இருப்பதுதான் ஏன் என்பது புரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# பருத்தித்துறை சுகாதார பிரிவில் டெங்கு ஒழிப்பு விசேட நடவடிக்கை

வடமராட்சி, மார்ச் 07

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஜே-415 கிராமசேவகர் பிரிவில் விசேட ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் போது, டெங்கு பெருகும் இடங்களை இனங்கண்டு அவை உடனடியாக தூய்மைப்படுத்தப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் பொதுப் பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர், கடற்படையினர், பொலிஸார் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஐ-02)

# உள்ளூர் உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும் சாவகச்சேரியில்!

யாழ்ப்பாணம், மார்ச் 07

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகார அமைச்சு நடத்துகின்ற உள்ளூர் உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும் நேற்று சாவகச்சேரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டப வளாகத்தில் கண்காட்சி விற்பனைக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சி கூடத்தை வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சமன் பந்துலசேன உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்தக் கண்காட்சிக் கூடத்தில் வடக்கு மாகா ணத்துக்குட்பட்ட சுயதொழில் உற்பத்திகளை மேற்கொள்ளுகின்ற மகளிரின் உற்பத்தி பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.




இதேநேரம் பொன்விழா மண்டபத்தில் வடக்கு மாகாணத்தில் அனைத்து துறைகளிலும் மகுடம் சூடிய பெண்கள் கௌரவிக்கப் படுகின்ற நிகழ்வும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, மகளிர் தின கண்காட்சியும் விற்பனை தொடர்ச்சியாக இடம்பெறும் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# மூன்றரை கிலோ கஞ்சாவுடன் பளையில் இளைஞர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 07

மூன்றரை கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் பளை - மாசார் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வெற்றிலைக்கேணி கடற்படை, விசேட அதிரடிப் படையினரால் இந்த இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைதான இளைஞர் மோட்டார் சைக்கிளில் சூட்சுமமான முறையில் போதைப்பொருளை வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். கைதானவர் வடமராட்சி கிழக்கு உடுத்துறையை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான இளைஞர் சட்ட நடவடிக்கைகளுக்காக பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

# பெரியபுராண சொற்பொழிவு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 07

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்திவந்த பெரிய புராண சிறப்பு சொற்பொழிவின் நிறைவு விழா சிறுப்பிட்ட மேற்கு அருள்மிகு நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்வார்.

சேக்கிழார் பெருமான் வணக்கத்தைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெறும். இதைத் தொடர்ந்து, "பெரிய புராணம் காட்டும் சிவனடியார் பெருமை" என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. த. குமரன் சொற்பொழிவாற்றுவார்.

நிறைவாக குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.



# ஆறு நாடுகளின் தூதர்கள் அநுரகுமாரவுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 07

6 நாடுகளின் தூதுவர்கள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பு நேற்று புதன் கிழமை பிற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை பணிமனையில் நடைபெற்றது.

பலஸ்தீன தூதுவர் சுஹைர் எம். எச். டார் ஷாய்ட், துருக்கி தூதுவர் திருமதி ஆர். டெமற் செகர்சியோக்ளு, பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் எம். டி. அரிபுல் இஸ்லாம், இந்தோனேசிய தூதுவர் திருமதி தேவி குஸ்தினா ரொபிங், மலேசிய உயர்ஸ்தானிகர் பாட்லி ஹிசாம் பின் அடம், மாலைதீவு பதில் தூதுவர் திருமதி பதிமத் ஹினா ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்க, நளிந்த ஜயதிஸ்ஸ, டாக்டர் றிஷ்வி சாலி, முதித நாணயக்கார ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி இதன்போது தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் இராஜதந்திரிகள் விழிப்புணர்வூட்டப்பட்டதோடு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.03.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர்களின் இன்றைய நிலைக்குக் காரணம்?

தமிழ் மக்கள் மத்தியில், தொடர்ந்தும் மற்றவர்கள்மீது குற்றஞ்சாட்டும் அறிக்கைகளும் – உணர்ச்சிவசப்படும் அறிக்கைகளுமே வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களை எல்லோருமே ஏமாற்றிவிட்டனர். தமிழ் மக்களை எல்லோரும் பயன்படுத்துகின்றனர். ஆனால், எவருக்குமே தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறையில்லை – என்பதே அனைத்து அறிக்கைகளினதும் சாராம்சமாகும்.

விடுதலைப் புலிகளின் தலைமையில் அரசியல் முன்னெடுக்கப்பட்ட போது விடுதலைப் புலிகளால் அனைத்தும் முடியும் – அவர்களால் மட்டும்தான் தமிழ் மக்களுக்கான விடுதலையை பெற்றுத்தர முடியும் என்பதே அனைவரதும் பார்வையாக இருந்தது. ஆனால், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டபோது அனைவரும் மற்றவர்கள்மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அந்தக் குற்றச்சாட்டுக்கள் இப்போதும் தொடர்கின்றன. யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்துவிட்டபோதிலும்கூட தமிழ் மக்களின் உண்மையான நிலைக்கான காரணம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் அரசியலில் அடிப்படையான பிரச்னையே இங்கிருந்துதான் ஆரம்பிக்கின்றது. தமிழ் மக்களின் பிரச்னைக்கான காரணத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் தேடாமல் பெரும்பாலானவர்கள் பிரச்னைக்கான காரணத்தை வெளியில்தேட முயற்சிக்கின்றனர். இந்தியாவில் தேடுகின்றனர் – அமெரிக்காவில் தேடுகின்றனர் – உலகம் முழுவதும் தேடுகின்றனர். யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதினான்கு வருடங்களில் மேற்குலகு பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்ததாகப் பலரும் கூறிக்கொண்டனர். ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் ஓர் அங்குலம்கூட முன்னோக்கி நகர முடியவில்லை. ஒருவேளை, தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் எதுவுமே கிடைக்காமல் போய்விடுமோ? – இப்படியொரு கேள்வியிலிருந்துதான் தமிழ் சமூகத்தின் மத்தியில் – உண்மையிலேயே தமிழ் சமூகத்தின் இருப்பின்மீது, உண்மையான கரிசனையுள்ள தரப்புகள் சிந்திக்க வேண்டும். ஏனெனில், தற்போதுள்ள நிலைமையை அவதானித்தால் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் சூனியமாகவே தெரிகின்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து நோக்கினால் தமிழ் மக்களின் அரசியல் வயது முக்கால் நூற்றாண்டாகின்றது. இந்தக் காலத்தில் தமிழ் மக்களின் அரசியலின் பெயரால் ஏராளமான விடயங்கள் அரங்கேறியிருக்கின்றன. நியாயங்களும் அநியாயங்களும் என்று ஒருவர் மற்றவர் மீது குற்றஞ்சாட்டிக் கொள்ளும் வகையில் ஆயுதப் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் பல்வேறு இயக்கங்களிலும் இணைந்து தங்கள் உயிர்களை தியாகம் செய்திருக்கின்றனர். அப்படி பார்த்தால் மாவீரர்களின் பட்டியல் மிகவும் நீண்டது. ஆனால், இத்தனை அழிவுகளும் இழப்புகளும் துயரங்களும் தமிழ் மக்களின் அரசியல் பாதையில் எவ்வாறான நன்மைகளை விளைவித்தது? – பதில் பூச்சியம்.

75 வருட காலம் அரசியலை முன்னெடுத்தும் எதனையும் அடைய முடியாமல் போனதற்கு எவ்வாறு மற்றவர்கள்மீது குற்றஞ்சாட்ட முடியும்? எங்களுக்கு, எங்களின் நலனில் அக்கறையிருப்பது சரியென்றால் மற்றவர்களும் தங்களின் நலனிலிருந்துதானே எங்களை நிறுத்துப் பார்ப்பார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்? எனவே, தமிழ் சமூகம் அரசியல் ரீதியில் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றால் முதலில் இந்தியாவை குற்றஞ்சாட்டுவது – அமெரிக்காவை குற்றஞ்சாட்டுவது என்பவற்றை முற்றிலுமாக தூக்கிவீச வேண்டும். அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்கு மட்டுமே உரித்தானவை. எங்களுடைய வீழ்ச்சிக்கான காரணங்களை எங்களின் அரசியல் அணுகுமுறைகளிலிருந்தும் புரிதல்களிலிருந்தும் மட்டும்தான் நோக்க வேண்டும். அவ்வாறு நோக்கினால் மட்டும்தான் நம்மால் இருக்கின்ற நிலையிலிருந்து ஒரு படியாவது முன்னோக்கிப் பயணிக்க முடியும்.

## சிவராத்திரி தின சொற்பொழிவுகள்

*யாழ்ப்பாணம், மார்ச் 07*

ஊர்காவற்துறை - நாரந்தனை வடக்கு - பண்டாரப்புலம் தான்தோன்றி மனோன்மணி அம்பாள் கோவிலில் மகா சிவராத்திரி தினமான நாளை வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவப்புலவர் செ. த. குமரன் "சிவ சிவ என்றிடச் சிவக்திதானே" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

• • •

*யாழ்ப்பாணம், மார்ச் 08*

சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினமான நாளை வெள்ளிக்கிழமை மாலை. 5. 30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதலில் ஓம் நமசிவாய பாராயணமும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன், "சிவ சிவ என்றிடச் சிவசக்திதானே" என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

*யாழ்ப்பாணம், மார்ச் 07*

நாரந்தனை - சரவணை - கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மகா சிவராத்திரி தினமான நாளை வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் "சிவராத்திரி உணர்த்தும் வாழ்வியல்" வழங்குவார். (ஐ)



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவில் உதவிகள்!

*வடமராட்சி, மார்ச் 07*

வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - தண்டுவான் மகா வித்தியாலயத்தில் க. பொ. த. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் 29 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக இரு மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக இந்த உதவி வழங்கப்பட்டது.

இதேவேளை, சிவராத்திரி விரத தினத்தை முன்னிட்டு வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறி சிவாலயத்தில் அன்னதான பணிக்குத் தேவையான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன. அத்துடன், முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் தரம் - 06 இல் கல்வி கற்கும் மாணவி, வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவன், பொன்னகர் முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை அறநெறி ஆசிரியர்கள் மூவருக்கும், சுவாமி விவேகானந்தா அறநெறிப் பாடசாலை அறநெறி ஆசிரியருக்குமாக 6 பேருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுக்கு நேரடியாக வழங்கினார்.

(ஐ-02)

## தேசிய இடமாற்ற கொள்கையில் திருத்தம் செய்யுமாறு கோரிக்கை


### கல்வி நிர்வாக சேவை வாண்மையாளர் சங்கம் வடக்கு ஆளுநரிடம் விடுத்தது!

*யாழ்ப்பாணம், மார்ச் 07*

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களைப் பாதிப்படையச் செய்யும் வடக்கு மாகாண இடமாற்ற கொள்கையை தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக திருத்தம் செய்ய வேண்டும். இந்தத் திருத்தத்தின்போதும் இடமாற்ற சபையிலும் சங்கத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும். தவறான இடமாற்றத்தை இடைநிறுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை வாண்மையாளர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநரைக் கோரியுள்ளது.

வடக்கு மாகாண கல்வி நிர்வாக சேவை இடமாற்றத்தின் போது விதி மீறல்கள், பாரபட்சங்கள், முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதை சுட்டிக் காட்டி சங்கத்தின் செயலாளர் ஈ. எம். ஆர். ஏக்கநாயக்க ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 07 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 24
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவாதசி




**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்று வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப் பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**இடபம்** சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர் பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**மிதுனம்** பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும்.

**சிம்மம்** வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். மகளுக்கு நல்ல வரன் அமையும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சில ரகசியங்களை தெரிந்துகொள்வீர்கள். அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார் தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**தனுசு** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**மகரம்** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**மீனம்** உங்கள் செயலில் வேகம் கூடும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ரூ. 400 கோடி போதைப்பொருள் மீட்பு!

இராமேஸ்வரம், மார்ச் 07

இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்படவிருந்த 108 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 401 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருளை பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.

இராமேஸ்வரம் - தனுஷ்கோடி கடல் வழியாக படகு மூலம் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதாக வருவாய் புலனாய்வு பிரிவின் சென்னை பணிமனைக்கு தகவல் கிடைத்தது.

கடலோர காவல் படையுடன் இணைந்து அவர்கள் நடத்திய சோதனையில் நாட்டு படகு ஒன்று சிக்கியது. அதிலிருந்த போதைப் பொருட்களை கைது செய்த அவர்கள், படகிலிருந்த மூன்று பேரையும் கைது செய்தனர்.

படகிலிருந்த 99 கிலோ ஹஷிஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இதன் மதிப்பு 108 கோடி இந்திய ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வளவு பெருந்தொகை போதைப்பொருள் தனுஷ்கோடியில் சிக்கியது இதுவே முதன் முறை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழகம் போதைப்பொருள் தயாரிப்பு மையமாகிவிட்டதா?

### எடப்பாடி பழனிசாமி கேள்வி

சென்னை, மார்ச் 07

போதைப் பொருள் தயாரிப்பு மையமாகவே தமிழகம் மாறிவிட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது என அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தி. மு. க. ஆட்சியில் தொடர்ந்து போதைப்பொருள் பறிமுதல்களும் போதைப் பொருள் மாபியா செயல்பாடுகளும் மக்களைப் பெரும் அச்சத்துக்கு ஆளாக்கியுள்ள நிலையில், இராமேஸ்வரம் கடல் பகுதியில் மேலும் 108 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல் என்ற செய்தி, தமிழகத்தை இந்த தி. மு. க. அரசு சுடுகாடாக மாற்றி வருகிறதோ என்ற பயத்தை ஏற்படுத்துகிறது.

தமிழகத்தை போதைப் பொருள் மொத்த விற்பனைக் கிடங்காக இந்த அரசு மாற்றியுள்ளதாக நான் ஏற்கனவே கூறிய நிலையில், தற்போது போதைப் பொருள் தயாரிப்பு மையமாகவே தமிழகம் மாறிவிட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

அரசின் மெத்தனத்தாலும், ஊக்குவிப்பிலும் தமிழகத்தில் குவிந்து கிடக்கும் போதைப் பொருட்களை முழுவதுமாக பறிமுதல் செய்து, தமிழகத்தின் கடல் எல்லைகளை போதைப் பொருள் புழங்காவண்ணம் பாதுகாக்குமாறு போதைப் பொருள் தடுப்பு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## தூத்துக்குடியில் கனிமொழி போட்டி!

சென்னை, மார்ச் 07

பாராளுமன்றத் தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் மீண்டும் போட்டியிட கனிமொழி விருப்ப மனு தாக்கல் செய்தார். தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் மீண்டும் போட்டியிட தி. மு. கவின் துணை பொதுச் செயலாளர் கனிமொழி விருப்ப மனு அளித்தார்.

ஏற்கெனவே அவருக்காக அமைச்சர்கள் கீதாஜீவன் மற்றும் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் 50இற்கும் மேற்பட்ட விருப்ப மனுக்களை அளித்திருந்தனர்.

இந்த சூழலில், நேற்று அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் மரியாதை செலுத்திய கனிமொழி அறிவாலயத்தில் நேற்று முன்தினம் தனது மனுவை கையளித்தார். (ஐ)

## தொகுதிகள் குறைப்பை ஏற்கமாட்டோம்!

### காங்கிரஸ் கட்சி

சென்னை, மார்ச் 07

காங்கிரஸ் கட்சிக்கு தமிழ்நாட்டில் தொகுதிகள் குறைக்கப்படுவதை ஏற்க முடியாது என தமிழக காங்கிரஸின் முன்னாள் தலைவர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழலில் காங்கிரஸ்தான் தி. மு. க. தி. மு. கதான் காங்கிரஸ். மதச் சார்பின்மையில் 100 சதவீதம் ஒன்றாக இருக்கிறோம். தொகுதி பங்கீடு, எண்ணிக்கை பங்கீடு என்பதெல்லாம் பெரிய விசயம் இல்லை. மோடியை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்பதில் ஒற்றை கருத்து கொண்ட கட்சியாக இரு கட்சிகளும் இருக்கின்றன.

எனவே எங்களுக்குள் வேறுபாடு எதுவும் இல்லை. காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப தொகுதிகள் பிரிக்கப்படும். மறைந்த தலைவர் காமராஜர் காலத்தில் இருந்த காங்கிரஸ் இப்போது இல்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தமிழக காங்கிரஸ் கட்சிக்கான தொகுதிகள் குறைக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது உண்மையில்லை - என்றார்.

## 23 தொகுதிகளில் தி. மு. க. போட்டியிடுவதற்கு முடிவு

சென்னை, மார்ச் 07

புதுச்சேரி உட்பட 23 தொகுதிகளில் தி.மு.கவும், மீதமுள்ள, 17 தொகுதிகளில் கூட்டணி கட்சிகளும் போட்டியிடுவது குறித்து கட்சியின் தேர்தல் பணி குழுவினருடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தியுள்ளார்.

தி. மு. க. கூட்டணியில், முஸ்லிம் லீக் கட்சிக்கு இராமநாதபுரமும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு நாமக்கல் தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா இரு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால், எந்த தொகுதி என்பதை அறிவிக்கவில்லை. காங்கிரஸ், ம. தி. மு. க., விடுதலை சிறுத்தைகள் மற்றும் மனித நேய மக்கள் கட்சிக்கு எத்தனை தொகுதிகள் என்பது இன்னும் முடிவாகவில்லை.

இந்நிலையில் சென்னை அறிவாலயத்தில், முதல்வர் தலைமையில் கட்சியின் தேர்தல் பணிக்குழு கூட்டம் நடந்தது. இதில், தி. மு. க., மட்டும், 21 தொகுதிகளில் போட்டியிடுவது என்றும் மனிதநேய மக்கள் கட்சி மற்றும் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிகளையும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட வைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதன்படி, தி. மு. க. கணக்கில் 23 தொகுதிகள் சேரும்.

காங்கிரஸ் கட்சிக்கு 8 தொகுதிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு இரு தொகுதிகளும் ம. தி. மு. கவுக்கு ஒரு தொகுதியும், ஒரு ராஜ்ய சபா ஆசனமும், இதேபோல் மக்கள் நீதி மய்யத்துக்கும் ஒரு தொகுதியும் ஒரு ராஜ்ய சபா ஆசனமும் ஒதுக்கப்படவுள்ளன. (ஐ)

## தமிழக பா. ஜ. கவின் வேட்பாளர் பட்டியல்!

சென்னை, மார்ச் 07

பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் தமிழ்நாட்டில் போட்டியிடுபவர்களின் வேட்பாளர்கள் பட்டியலுடன் டில்லி செல்வதாக அந்தக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் உள்ளன. இதில், யார் எந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது என்பது குறித்த பட்டியலுடன் கட்சியின் தேசிய தலைவரை சந்தித்துப் பேசவே செல்கிறேன் என்று இது தொடர்பில் டில்லியில் பேச்சு நடத்தப்படும். நாங்கள் அங்கிருந்து திரும்பும்போது தமிழ்நாட்டில் போட்டியிடும் பா. ஜ. கவின் வேட்பாளர் பட்டியல் வெளியாகும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு



# ராஜபக்ஷக்களால் இனி எதையும் செய்யமுடியாது

## சவால் விடுகிறார் அநுரகுமார

கொழும்பு, மார்ச் 07

**பஸில் ராஜபக்ஷ அல்ல எந்த கொம்பன் வந்தாலும் இலங்கை அரசியலில் ராஜபக்ஷக்களால் இனி எதையும் செய்ய முடியாது - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட மகளின் அமைப்பின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் வேண்டாம், இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் வரும்போது இலங்கையில் புதிய அரசொன்றே ஆட்சியில் இருக்கும்.

ஒன்றரை வருடத்துக்கு முன்னர் விமான நிலையத்தில் இந்த பக்கம் இருந்து அந்த போகமுடியாமல் தவித்தவர் தான் பஸில். அவர்களால் இலங்கை அரசியலில் மீண்டும் ஒன்றும் செய்ய முடியாது.

அண்ணன் ஜனாதிபதியாக இருந்தபோது, மற்றுமொரு அண்ணன் அமைச்சராக இருந்தபோது, மற்றுமொரு சகோதரர் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது, மகன்மார் அமைச்சராக இருந்தபோது போட்ட ஆட்டத்தை இனி போடமுடியாது.



வெள்ளத்தில் மிதந்துவரும் கட்டையொன்றை கண்டதும் கீரியும், பாம்பும் அதில் ஏறும். ஆனால் வெள்ளம் இல்லாத சூழ்நிலையாக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? தற்போது தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் அலைவீசுகின்றது. அந்த அலைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ரணில் -மஹிந்த-மைத்திரி -சந்திரிக்கா எல்லாம் ஒன்றாக இணைந்துள்ளனர்.-என்றார். (அ)

# யாழில் 2 வர்த்தகர்களுக்கு 28 ஆயிரம் ரூபா அபராதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 07

காலாவதியான குளிர்பானத்தை விற்பனைக்காக காட்சிப்படுத்திய வர்த்தகர்களுக்கு 28,000 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மற்றும் மீசாலைப் பகுதியில் உள்ள இரு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன் தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது, இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து இருவரையும் கடுமையாக எச்சரித்த மன்று, ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டமும், மற்றைய நபருக்கு 08 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளதோடு கைப்பற்றப்பட்ட காலாவதியான குளிர்பானங்களை அழிக்கவும் உத்தரவிட்டுள்ளது. (அ)

# பாடசாலையில் தவறி விழுந்து 13 வயது மாணவி உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 07

கலவானை, மீபாகம பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் தவறி விழுந்து மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.

கலவான பகுதியைச் சேர்ந்த 13 வயதுடைய இமல்கா சட்சராணி என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனை அடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, குறித்த மாணவி உயிரிழந்து விட்டமை தெரிய வந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலவானை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரசியல் செயல்பாடுகளுக்காக பாடசாலைகளை பாவிக்க தடை

கொழும்பு, மார்ச் 07

பாடசாலைகள் மற்றும் பாடசாலை வளாகங்களை அரசியல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கும் அதிகாரத்தை மாகாண ஆளுநர்களுக்கு வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன இதனை அறிவித்தார்.

பாடசாலை மற்றும் பாடசாலை வளாகங்களில் அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாக பல்வேறு தரப்பிடமிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



அவற்றினை கருத்திற்கொண்டு, அந்த பகுதிகளில் கூட்டங்கள் உள்ளிட்ட அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதனை தடை செய்வதற்கு மாகாண ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

# சம்பள அதிகரிப்பு தொடர்பில் மத்திய வங்கியின் அதிகாரிகளிடம் கட்சித் தலைவர்கள் அதிருப்தி!

கொழும்பு, மார்ச் 07

சுயமான தீர்மானத்துக்கு அமைய பணியாளர்களின் சம்பளத்தை அதிகரித்தமை தொடர்பில் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளிடம் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், மத்திய வங்கியின் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய மத்திய வங்கி சட்டமூலத்தில் சுயாதீன தீர்மானமாக சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் இருந்தபோதிலும், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய குறித்த விடயத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற காரணத்தினால் இவ்விடயம் சட்டமூலத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்படி, புதிய சட்டத்தில் மத்திய வங்கியின் பணிகளை சுயாதீனமாக மேற்கொள்ள ஏற்பாடுகள் உள்ளபோதிலும், சுயாதீன தீர்மானத்தின் அடிப்படையில் சம்பளத்தை அதிகரிக்க எந்தவொரு இடத்திலும் அதிகாரம் இல்லையென அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குறிப்பிடுகையில்,

சட்டத்தின் 5,8 மற்றும் 23ஆவது பிரிவுகளில் அதற்கான ஏற்பாடுகள் இருப்பதாகவும், நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பில் சகல செலவீனங்களையும் ஈடு செய்வதற்கு மத்திய வங்கியின் நிதியத்தைப் பயன்படுத்த சட்டத்தில் இடமிருப்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

எனினும், செலவீனங்கள் தொடர்பில் சட்டத்தில் ஏற்பாடுகள் இருந்தபோதிலும், சம்பளம் தொடர்பில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் இல்லையென கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

(அ)

# மன்னா ரமேஷை அழைத்து வர டுபாய் செல்லவுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு!

கொழும்பு, மார்ச் 07

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 'மன்னா ரமேஷ்' என்பவரை டுபாயில் இருந்து அழைத்து வருவதற்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் குழுவொன்று டுபாய் செல்லத் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தனது மனைவியுடன் காரில் பயணித்தபோது டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும், இந்த விடயம் டுபாய் பொலிஸாரால் இலங்கை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவிசாவளைப் பிரதேசத்தில் உயர் பொலிஸ் அதிகாரிகளை அச்சுறுத்தியமை, கொலை செய்தமை, கப்பம் பெற்றமை, போதைப்பொருள் கடத்தப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவரைக் கண்ட இடத்தில் கைது செய்யச் சர்வதேச பொலிஸாரினால் சிவப்பு அறிவிப்பும் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஓட்டோ - லொறி மோதி மூன்று பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 07

குருநாகல் பொத்துஹெர, பூலோகொல்ல சந்திக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

குருநாகலில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மரக்கறி பாரவூர்தியுடன் எதிர்திசையில் வந்த ஓட்டோ மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மூவர் உயிரிழந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொத்துஹெர பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச அதிகாரிகளின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்காதீர்!

## சபையில் கோரினார் சபாநாயகர்



கொழும்பு, மார்ச் 07

அரச அதிகாரிகள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதை தவிர்க்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்களது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதாக அரச அதிகாரிகள் சிலர் தம்மிடம் முறையிட்டுள்ளதாக சபாநாயகர் குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகள் மீது விமர்சனங்கள் இருப்பின் அவர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்து கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், நிலையியற் கட்டளை 91(எ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், அவ்வாறான அவதூறு அல்லது தவறான கருத்துக்களை ஹென்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மின்சாரக் கட்டணம் 35 வீதத்தால் குறைக்கப்படுவதே நியாயமானது

## ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 07

**கடந்த 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் என்ற ரீதியில் பொது மக்கள் நலன்கருதி என்னால் முன்வைக்கப்பட்ட மின்கட்டணம் தொடர்பான பரிந்துரை இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் அமுல்படுத்தப்படுவதென்பது என்னுடைய தியாகத்துக்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கின்றேன். எனினும் இலங்கை மின்சாரசபை பெற்றுக்கொண்டுள்ள இலாபத்தை பொதுமக்களுக்கு உரியவாறு பகிர்ந்தளிக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்துவதாயின் மின் கட்டணம் 35 வீதத்தால் குறைக்கப்படுவதே ஆரோக்கியமானது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.**

21.9 சதவீத மின்கட்டண குறைப்புக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் கொழும்பிலுள்ள அவரது பிரத்தியேக அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்களின் நலன்கருதி 21.9 சதவீதத்தால் மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. இருந்த போதிலும் கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட மின்சார கட்டண உயர்வால் இலங்கை மின்சார சபை பெற்றுக் கொண்ட இலாபத்தை அதன் பங்காளர்களான பாவனையாளர்களுக்கு உரியவாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டியது கட்டாயம். அது தொடர்பான தெளிவு பொதுமக்களுக்கு இருக்க வேண்டும்.

கடந்த 2023 ஆம் ஆண்டு மாத்திரம் இலங்கை மின்சார சபை வருமானமானது 62 பில்லியன்களாக பதிவாகியுள்ளது. அதேவேளை இவ்வாண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி காலப் பகுதிகளில் கிட்டத்தட்ட 35 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. அப்படியாயின் இலங்கை மின்சாரபை பெற்றுக்கொண்டுள்ள சுமார் 95 சதவீத இலாபத்தை பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும். அதனை நேரடியாக மின்கட்டண குறைப்பின் ஊடாகவே வழங்க முடியும். அப்படியாயின் 22 வீதமென்ற மின்கட்டண குறைப்பை 35 வீதமாக குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே நியாயமும் கூட.

கடந்த 2023ஆம் ஆண்டு மின்சார சபையின் ஐந்தொகையில் 60 பில்லியன் ரூபா வட்டித் தொகையானது இலங்கை மத்தியவங்கிக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கை மத்திய வங்கியின் வருமான பட்டியலானது 40 பில்லியனாக பதி



வாகியுள்ளது. அப்படியாயின் கடந்த ஆண்டு இலங்கை மத்தியவங்கியின் பிரதான வருமானமானது இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட்டுள்ளமை தெட்டத்தெளிவாக தெரிகிறது. இந்த பெருந்தொகை கட்டணத்துக்கு இலங்கை மின்சார சபையின் ஊழல் மற்றும் முறையற்ற திட்டமிடல்களே மிகப்பிரதான காரணங்களாகும்.

இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான எல்லை தாண்டிய மின்னணு வர்த்தக உடன்படிக்கை வரவேற்கத்தக்கது. உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இதுபோன்ற எல்லை தாண்டிய வர்த்தக உடன்படிக்கைகள் வெற்றிகரமான ஒரு உபாயமாகவே பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் இந்தியாவுடனான மின்னணு வர்த்தக உடன்படிக்கை வரவேற்கத்தக்கது. இதுபோன்ற ஒப்பந்தங்கள் கடந்த காலங்களிலேயே செய்யப்பட்டிருக்க வேண்டும். என்றாலும்கூட இவ்விரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உடன்படிக்கையானது அரசியல் தலையீடுகளற்ற வர்த்தக நோக்கத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்துவதாக அமையுமென்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# நுணாவில் பகுதியில் மண் கடத்தல்; டிப்பரை விட்டு தப்பி சென்ற சாரதி

யாழ்ப்பாணம், மார்ச் 07

நுணாவில் பகுதியில் இருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை நேற்று புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் போக்குவரத்துக் கடமையில் இருந்த சாவகச்சேரி பொலிஸார் மறித்துள்ளனர்.

எனினும் குறித்த டிப்பர் நிறுத்தாமல் சென்றுள்ளது.

இதனையடுத்து டிப்பர் வாகனத்தை துரத்திச் சென்ற பொலிஸார் சாவகச்சேரி சுற்றுவட்டத்தில் வைத்து அதனை மறித்தனர்.

இதன்போது டிப்பர் சாரதி தப்பிச் சென்றுள்ளார். தமது ஊரில் மண் கடத்தல் இடம்பெறுவதை அறிந்த அந்த ஊர் இளைஞர்கள் மூவர் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் டிப்பரை துரத்தி வந்தனர்.

இந்நிலையில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த அந்த ஊர் இளைஞன் அங்கிருந்து சென்ற நிலையில் மற்றைய மோட்டார் சைக்கிள் சாரதி மதுபோதையில் இருந்ததால் கைது செய்யப்பட்டார். அவருடன் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து வந்தவரும் கைது செய்யப்பட்டார்.

டிப்பர் சாரதி இதுவரை கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 12 நீலக்கொடி கடற்கரைகள் இலங்கையில் அடையாளம்

கொழும்பு, மார்ச் 07

“நீலக்கொடி கடற்கரை” யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையில் தற்போது 12 முக்கிய கடற்கரைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நீலக்கொடி கடற்கரை என்பது கடலோர மற்றும் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்காகவும் நாட்டின் முயற்சிகளை பாராட்டும் நோக்கில் வழங்கப்படும் சர்வதேச சுற்றுச்சூழல் அங்கீகாரம் ஆகும்.

அதன்படி, நாட்டில் 4 கடற்கரைகளை செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருவதாக ஆணையம் தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான துறைசார் மேற்பார்வைக் குழு “நீலக் கொடி கடற்கரை” என்ற விடயம் தொடர்பில் கலந்துரையாடிய போதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையில் துறைசார் மேற்பார்வைக் குழு ஒன்று கூடியது. இதன் போது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் நாட்டின் கரையோரங்களைத் பராமரிப்பதை நோக்கமாகக் கொண்ட “நீலக் கொடி கடற்கரை” என்ற கருத்துருவில் கலந்துரையாடல் நடைபெற்றது. (அ)

# பொலிஸ் பொறுப்பதிகாரியின் தாக்குதலில் இரண்டு பேர் காயம்!

கொழும்பு, மார்ச் 07

புத்தளம் - உடப்பு பகுதியில் பொலிஸ் குற்றவியல் விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரி மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் உடப்பு கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 9.30 அளவில் குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரியின் வாகனத்தின் மீது உமிழ்ந்தமைக்காக அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தை அடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் தாமாக அனுமதியாகியுள்ளார். (அ)

# இரண்டு ஓய்வூதியங்கள் பெறுகிறேனா? குற்றச்சாட்டை மறுக்கின்றார் சந்திரிகா

கொழும்பு, மார்ச் 07

தான் இரண்டு ஓய்வூதியங்களை பெறுவதாக மிகிந்தலை விகாராதிபதி தெரிவித்துள்ளதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்துள்ளார்.

மிகிந்தல ரஜமஹா விகாரையின் தலைமை மதகுரு வலஹ தம்மரட்ண தேரர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளையே அவர் நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் எனக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை மாத்திரம் நான் பெறுகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பதவிக்காலத்தில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான ஓய்வூதியத்தை 97000 ரூபாவாக அதிகரித்தார். எனினும் எனக்கும் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவுக்கும் இந்த ஓய்வுதிய அதிகரிப்பு வழங்கப்படவில்லை.

எனினும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதும் இது சரிசெய்யப்பட்டது. எனது வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படும் ஓய்வூதியம் சமூக சேவைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது-என்றார். (அ)

# நீதிமன்று முன்பாக அமிலத் தாக்குதல்!

## இரத்தினபுரியில் அறுவர் காயம்

கொழும்பு, மார்ச் 07

இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைந்திருக்கும் மேல் நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்று காலை அசிட் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த அசிட் தாக்குதலில் ஆறு பேர் எரி காயங்களுடன் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகன விபத்தில் உயிரிழந்த ஒருவரின் ஆதரவாளர்களால் இந்த அசிட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆரம் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்துக்கு பொறுப்பான பொலிஸ் பரிசோதகர் பிரதீப் சேனாநாயக்க மற்றும் இரத்தினபுரி குற்ற புலனாய்வு பிரிவிற்கு பொறுப்பான பொலிஸ் பரிசோதகர் காமினி ஆகியோரின் தலைமையில் மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அசிட் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவரும் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக இரத்தினபுரி பொலிஸார் கூறினர். (அ)

# கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 07

பளை மாசர் பகுதியில் மூன்றரை கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சூட்சுமமான முறையில் மறைத்து போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து வெற்றிலைக்கேணி கடற்படையுடன் இணைந்து அதிரடிப்படையினர் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டு குறித்த இளைஞனை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் உடுத்துறை பகுதியை சேர்ந்தவர் என்பதுடன் கைப்பற்றப்பட்ட போதை பொருள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக இளைஞன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்படுவது அவசியம்!

## மொட்டு கட்சி எம்.பி. கோரிக்கை



கொழும்பு, மார்ச் 07

**ஜனாதிபதி தேர்தலும், பொதுத்தேர்தலும் குறுகிய கால இடைவெளிக்குள் நடப்பதற்கான சாத்தியம் உள்ளது - என்று அரச பங்காளிக்கட்சியான பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மொட்டு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன கூறியவை வருமாறு-

பஸில் ராஜபக்ச முடிவுகளை எடுத்த பின்னர் முன்னோக்கிப் பயணிப்போம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

எது எப்படி இருந்தாலும் ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் என்பன இவ்வருடத்துக்குள் நடத்தப்படும். இரு தேர்தல்களும் குறுகிய இடைவெளிக்கும் நடத்தப்படலாம்-என்றார். (அ)

# 45 போலி நோட்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 07

பொத்துஹர பிரதேசத்தில் 5000 ரூபா பெறுமதியான 45 போலி நோட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை சோதனையிட்டபோதே அவரிடமிருந்து இந்த போலி நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பொல்பிதிகம பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவராவார்.

இவர் ஏற்கனமே பணம் அச்சடிக்கும் இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்டவர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

# கோப்பாயில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணம்,

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே 20 லீற்றர் சட்டவிரோத மதுபானத்துடன் அந்த பெண் கைதாகியுள்ளார்.

சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை மக்கள் தம் புகைப்படத்துடன் கூடிய முத்திரையை அச்சிட்டு பயன்படுத்த வாய்ப்பு!

ශ්‍රී ලංකා තැපැල් දෙපාර්තමේන්තුව
இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka
Sri Lanka POST

கொழும்பு, மார்ச் 07

இலங்கை மக்கள் தமது புகைப்படத்துடன் கூடிய முத்திரையை அச்சிட்டு பயன்படுத்துவதற்கான வாய்ப்பை இலங்கை தபால் திணைக்களம் தற்போது வழங்கியுள்ளது.

நாட்டின் மிகப் பழமையான தனியார் வர்த்தக வங்கி ஒன்றின் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட போதே தபால் மா அதிபர் ருவன் சத்குமார இதனைத் தெரிவித்தார்.

"உங்கள் படத்துடன் ஒரு முத்திரையை அச்சிடலாம். ரூ. 2,000 பெறுமதியான 20 முத்திரைகள் கொண்ட தாள் இவ்வாறு புகைப்படம் அச்சிட்டு கொடுக்கப்படும். உங்கள் பிறந்தநாள், உங்கள் நண்பரின் பிறந்தநாள், உங்கள் மகன் அல்லது மகளின் மகன் திருமண படம் போன்றவற்றை முத்திரையில் பதிக்கலாம். இது பொதுவாக தபால் தலையாக பயன்படுத்தப்படலாம்-என்றார் தபால்மா அதிபர்.

# ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிடம் நீதி கோரினார் கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, மார்ச் 07

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்து ஐந்து வருடங்கள் ஆகின்ற நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் காணொளி ஊடாக கர்தினால் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட போதே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அனைவருக்குமான வெளிப்படையான மற்றும் சுயாதீனமான பொறுப்புக்கூறல் செயன்முறையின் தோல்வி குறித்தும் அவர் இதன் போது கவலை தெரிவித்துள்ளார்.



தாக்குதல் நடத்தப்பட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், இன்று வரை பல்வேறும் மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளதாக கர்தினால் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வெளிப்படையான, சுதந்திரமான மற்றும் நியாயமான விசாரணைக்காக தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோள்கள் இலங்கை அரசாங்கத்தால் தொடர்ந்தும் நிராகரிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த காலத்தில் நடந்த அனைத்து விதமான கொலைகள், காணாமல் போதல்கள் மற்றும் அத்துமீறல்கள் பற்றிய வெளிப்படையான விசாரணைகள் அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு தேசத்தையும் அனைத்து விடயங்களிலும் வெளிப்படையான விசாரணைக்கு வலியுறுத்துமாறும் கர்தினால் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# சிறப்பு முகாம்களில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களை விடுவியுங்கள்

## ஜனநாயக போராளிகள் கட்சி கோரிக்கை

ஜனநாயக போராளிகள் கட்சி
எமது மக்களுக்காக என்றுமே உறுதியுடன்
JANANAAYAGA PORALIKAL KADCHI

யாழ்ப்பாணம், மார்ச் 07

இந்திய நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போது சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களை மீண்டும் தாயகம் திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் விடயம் தொடர்பில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவரான சி.வேந்தனால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் அதாவது:-

தசாப்தங்கள் கடந்தும் ஈழத் தமிழர்களது நியாயங்களையும் அறைகூவல்களையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என தமிழினம் கருதுகிறது.

ஈழத்தமிழர்களதும் இந்தியாவினதும் சமூக அரசியல் பொருளாதார பாதுகாப்பு உறவுநிலைகள் பன்னெடுங்கால வரலாற்றுக்கு உரியவை.

அந்த உரித்தின் அடிப்படையில்தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது.

இந்தியா தனது பிராந்தியத்தின் நலன் மற்றும் ஈழத்தமிழினத்தின் பாதுகாப்பு அரசியல் உரிமை என்பவற்றை கருத்தில் கொண்டே தனது முழுமையான பலத்தின் திரட்சியின் அடிப்படையில்தான் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் இலங்கையில் தனது படைத் தரையிறக்கத்தையும் நிகழ்த்தியிருந்தது.

அதற்கு பின்னரான சில கசப்பான அசாதாரணமான நிகழ்வுகள் இந்திய ஈழத்தமிழர்களது உறவு நிலைகளில் இடைவெளியினை ஏற்படுத்தி இறுதியில் சிறிபெரும் புத்தூரில் ஏற்படுத்தப்பட்ட துன்பியல் நிகழ்வினை அடுத்து ஈழத்தமிழர்களை இந்தியா முற்றுமுழுதாக கைவிட்டது.

எங்கு எமக்கும் இந்தியாவிற்குமான உறவுநிலை கைவிட்டு போனதோ அங்கிருந்துதான் அவ்வுறவு நிலை தொடங்கப்பட வேண்டும் என நாங்களும் எமது மக்களும் கருதுகிறோம்.

சிறீபெரும்புதூரின் வழக்குகளில் தண்டனைபெற்று இந்திய நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களான முருகன், றொபேட்டயஸ் ஜெயக்குமார் ஆகியோர் விரைந்து சிறப்பு முகாம்களில் இருந்து விடுவித்து தாயகம் திரும்ப ஆவண செய்ய வேண்டும் என இந்திய மத்திய மாநில அரசுகளை எமது மக்களின் சார்பில் கேட்டுகொள்கிறோம்-என்றுள்ளது. (அ)

# வேலைக்காக சென்ற 476 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 07

வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்கு சென்ற இலங்கையர்களில் 476 பேர் 2023ஆம் ஆண்டு உயிரிழந்துள்ளனர்.

பல்வேறு நாடுகளில் வசித்து வந்த இலங்கையர்கள், பல்வேறு காரணங்களினால் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 366 பேர் இயற்கை காரணங்களினால் உயிரிழந்துள்ளனர்.

36 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளதுடன், 34 பேர் வாகன விபத்துக்களினால் உயிரிழந்துள்ளனர். ஏனைய காரணங்களினால் 27 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

10 இலங்கையர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலா விசாவை பயன்படுத்தி வேலைக்காக செல்வது சட்டவிரோதமானது என்றும் சுற்றுலா விசாவை பயன்படுத்தி வேலை தேடி வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம் என்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அண்மையில் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

தொழிலுக்காக செல்வோர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மை பதிவு செய்ததன் பின்னர் வெளிநாடுகளுக்கு செல்வது கட்டாயமானதாகும்.

ஓமானில் தொழிலுக்காக சென்று மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்ட ஒருவர் ஏழு இலட்சம் ரூபா செலவில் சுற்றுலா விசாவில் அங்கு சென்றிருந்தமையும் தெரிய வந்துள்ளதாக பணியகம் அண்மையில் அறிவித்திருந்தது.

2023ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் 1 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம், 1 இலட்சத்து 71 ஆயிரத்து 15 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஜூலை மாதத்தில் மாத்திரம் 24 ஆயிரத்து 578 பேர் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

அத்துடன், 2022ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 11 ஆயிரத்து 56 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# கிழக்கு முஸ்லிம்களின் பிரச்னை; ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு

## ஆளுநர், கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் பங்கேற்றனர்

மட்டக்களப்பு, மார்ச் 07

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பி களுக்கிடையிலான சந்திப்பு நேற்று காலை 11.30 மணியளவில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.**

**இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், ஏ.எல்.எம். அதாஉல்லா, எம்.சி. பைசால் காசிம், செய்யத் அலிஸாஹிர் மௌலானா, சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபின் ஆகியோர் பங்கேற்றனர்.**



இதில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதான பிரச்னைகள் தொடர்பில் நீண்டநேரம் ஆராயப்பட்டதுடன் கிழக்கு மாகாண அண்மைய இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்ற பிரச்னைகள், கிழக்கு மாகாண சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமன விடயங்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணி பிரச்சினைகள், மூடப்பட்டுள்ள காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகைக்கு அனுமதி வழங்கும் விவகாரம், மட்டக்களப்பு மாவட்ட கல்வி மேம்பாட்டு விடயங்கள், எனப்பல சமூக நல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு ஆராயப்பட்டது.

இவற்றில் பல விடயங்களுக்கு முழுமையான தீர்வும், சில விடயங்களுக்கு துறைசார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதாக தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இது விடயமாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும்- முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான சந்திப்புக்கள் ஊடாக முஸ்லிங்களின் பிரச்னைகளை பேசி தீர்க்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார்.

மேலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு தேவையான போதுமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கும் விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்முனை பஹ்ரியாவில் உளவள ஆலோசனை நிகழ்வு



அம்பாறை, மார்ச் 07

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவர்களுக்கான உளவள ஆலோசனையும் வழிகாட்டலும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.எஸ். எம். பைஸால் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி முகாமையாளரும் உளவள ஆலோசகருமான நெய்னா முஹம்மட் நௌஸாத் விஷேட வளவாளராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# நிரந்தர காணி உறுதிப் பத்திரம் வழங்க ஹரீஸ் எம்.பி நடவடிக்கை

அம்பாறை, மார்ச் 07

கல்முனை மாநகர பிரதேசத்தில் உள்ள தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் (பெர்மிட்) உள்ள கடை சொந்தக்காரர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கும் விதமாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று காணி ஆணையாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடிய போது ஜனாதிபதியின் “உறுமய” திட்டத்தின் கீழ் நிரந்தரமான காணி உறுதிகளை வழங்க காணி ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

கல்முனை மாநகர பிரதேசத்தில் உள்ள கடை உரிமையாளர்கள் மத்தியில் மிக நீண்டகாலமாக நிலவிவரும் இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கடந்த வாரம் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்கவை சந்தித்து பேசியதை அடுத்து அவர்கள் வழங்கிய துரித ஒத்துழைப்பினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலைக்கு கதிரைகள் பெற்றோரால் அன்பளிப்பு



அம்பாறை, மார்ச் 07

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் நீண்ட கால தேவையாக காணப்பட்ட பிளாஸ்ரிக் கதிரைகளை பெற்றோர்களின் பங்களிப்பில் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கல்லூரி முதல்வர் எ.பி. நஸ்மியா சனூஸ் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுமார் 250 பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வாழைச்சேனையில் பிரபல பெண் போதைப்பொருள் வியாபாரி கைது!

மட்டக்களப்பு, மார்ச் 07

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள பிறைந்துறைச்சேனை பகுதியில் போதை பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டை முற்றுகையிட்ட விசேட அதிரடிப்படையினர் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரபல பெண் வியாபாரி ஒருவரை கைது செய்தனர்.

நீல நிறம் கொண்ட புதிய ஐஸ் போதைப்பொருள் உட்பட 4 கிராம் 470 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருள், பணம் என்பவற்றை மீட்டு ஒப்படைத்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை முகாம் விசேட அதிரடிப் படைக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து அம்பாறை மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் பணிப்பாளர் வாவிட விதானவின் ஆலோசனைக்கமைய முகாம் பொறுப்பதிகாரி கே. ஜி. லக்மால் தலைமையிலான குழுவினர் வாழைச்சேனை பிறந்துறைச்சேனை பகுதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது போதை வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த பெண் ஒருவரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 340 மில்லிக்கிராம் புதிய வகையான நீல நிறம் கொண்ட ஐஸ் போதை பொருள் மற்றும் வெள்ளை நிறமுடைய 4 கிராம் 130 மில்லிக்கிராம் உட்பட 4 கிராம் 470 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருள் மற்றும் 8 ஆயிரத்து 750 ரூபாய் பணத்தை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்ட 36 வயதுடைய பெண்ணை விசேட அதிரடிப்படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவரது கணவர் ஏற்கனவே போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நிலையில் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# கல்முனை ஸாஹிரா பழைய மாணவரால் உதவி அதிபர் காரியாலயம் புனரமைப்பு!

அம்பாறை, மார்ச் 07

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 1991 தொடக்கம் 1996 வரை ஒரே வகுப்பில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் அனுசரனையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட உதவி அதிபருக்கான அலுவலக அறையை கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு அண்மையில் பொறியியளாளர் முஹமட் றிஸ்கான் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் கல்முனை சாஹிராக் கல்லூரிக்கு உதவி அதிபருக்கான காரியாலயம் ஒன்றை புனர்நிர்மாணம் செய்து தருமாறு பாடசாலை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய அக்காரியாலயத்தின் தேவைகளை கண்டறிந்து அதை தொழில் நிமிர்த்தம் வெளிநாடுகளில் வாழும் வகுப்புத் தோழர்களின் உயர் பங்களிப்பில் சமார் 3 1/2 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பாவனைக்கு கையளித்துள்ளனர்.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# ஜேர்மன் உளவுத்துறைக்குள் புகுந்த ரஷ்ய உளவாளிகள்?

## இராணுவ அதிகாரிகளின் இரகசியமான உரையாடலை வெளியிட்ட ரஷ்ய ஊடகங்கள்

மொஸ்கோ, மார்ச் 07

**உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை வழங்குவது சம்பந்தமாக ஜேர்மன் இராணுவ உயர் அதிகாரிகள் இடையில் நடந்த உரையாடல் அடங்கிய குரல் பதிவை ரஷ்ய ஊடகங்கள் பகிரங்கப்படுத்தியதை அடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் பாதிக்கப்படும் உருவாகியுள்ளது.**



இந்த சம்பவம் தொடர்பில் மிகவும் கோபமடைந்துள்ள ஜேர்மனிய சான்சிலர் ஓலப் ஷேஹால்ஸ்,இராணுவ அதிகாரிகள் இடையில் நடந்த உரையாடல் மற்றும் புலனாய்வு தகவல்கள் கசிந்தமை குறித்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஜேர்மன் இராணுவ அதிகாரிகள் இடையில் கலந்துரையாடப்பட்ட உக்ரைன் மற்றும் ரஷ்யா போர் சம்பந்தமான இரகசிய தகவல்கள் அடங்கிய குரல் பதிவு 40 நிமிடங்கள் ஓடக்கூடியது. இதில் உக்ரைனுக்கு நீண்டதூரம் சென்று தாக்கக்கூடிய ட்ரூரஸ் ஏவுகணை வழங்கப்படுவது சம்பந்தமான தகவல் வெளியில் கசிந்துள்ளமை பாரதூரமான விடயம் என ஜேர்மன் சான்சிலர் ஏற்றுக்கொண்டுள்ளார்.


இப்படியான மிகவும் இரகசியமான விடயங்கள் அடங்கிய உரையாடலை எப்படி பதிவு செய்ய முடியும், அதனை செய்தது யார்?, ஜேர்மனிய இராணுவத்தில் ரஷ்யாவின் உளவாளிகள் இருக்கின்றனரா என்பதை விசாரணையில் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும் என சான்சிலர் உத்தரவிட்டுள்ளார்.

ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சு கடந்த சனிக்கிழமை வெளியான இந்த உரையாடல் அடங்கிய குரல் பதிவின் உண்மை தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

"எமது கணிப்புக்கு அமைய விமானப்படைக்குள் நடந்த உரையாடலை திருடி தயாரித்து பகிரங்கப்படுத்தியுள்ளனர். தற்போது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் உரையாடல் பதிவு செய்யப்பட்டதா அல்லது பிரதி எடுக்கப்பட்டதா என்ற வித்தியாசத்தை சரியாக கூற முடியாது" என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஊடகங்களிடம் கூறியுள்ளார். (அ)

# சீனாவின் செயலிகளை தடை செய்வது சரியல்ல!

## அமெரிக்க சிவில் விடுதலை அமைப்பு




நியூயோர்க், மார்ச் 07

அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் சீனாவின் ரிக்ரொக் செயலியை தடை செய்யும் வகையில் கொண்வரப்படவுள்ள மசோதாவானது அரசியலமைப்பிற்கு முரணான செயல் என அமெரிக்க சிவில் விடுதலை அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சக்தி மற்றும் வர்த்தகத்துறை இருதரப்பு முன்மொழிவுகளுக்கு வாக்களித்திருந்தது. இதன்போது தேசிய பாதுகாப்பு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் ஆண்டாக இது இருப்பதினால் தலைவர்கள் மலினமான அரசிலை நகர்வுகளை மேற்கொள்வதாக அமெரிக்க சிவில் விடுதலை அமைப்பின் சிரேஸ்ட கொள்கை வகுப்பாளர் ஜின்னா லவன் டோப் சுட்டிக்காட்டியுள்ளர். (அ)

# உக்ரைனுடனான போக்குவரத்து ஒப்பந்தம் மறுபரிசீலனைக்கு!

## கட்டுப்பாடுகளை நீக்கவும் தீர்மானம்

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 07

உக்ரைனுடனான போக்குவரத்து ஒப்பந்தத்தை மறுபரிசீலனைக்குட்படுத்தி மாற்றங்களை கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம் தெரிவித்துள்ளதாக போலந்து தெரிவித்துள்ளது.

போலந்து பாரஊர்தி சாரதிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக்கருத்தினை போலந்தின் உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைனுக்கு பொருட்களை கொண்டு செல்லும் வாகன சாரதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை திருத்தியமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உக்ரையன் எல்லைப் பகுதிகளை மறித்து போலந்து சாரதிகள் போராட்டம் நடத்தியிருந்த நிலையில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (அ)

# நீருக்கு அடியிலான முதலாவது மெட்ரோ ரயில் சேவை மோடி ஆரம்பித்து வைத்தார்!



புதுடில்லி, மார்ச் 07

இந்தியாவின் நீருக்கு அடியிலான முதலாவது மெட்ரோ தொடருந்து சேவையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

கொல்கத்தாவின் கிழக்கு - மேற்கு மெட்ரோ தொடருந்து மார்க்கத்தில் ஹவுரா மைதான் - எஸ்பிளனேட் ஆகிய நகரங்களுக்கு இடையே நீருக்கு அடியில் இந்த தொடருந்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

4.8 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த தொடருந்து மார்க்கத்தில் ஹூக்ளி என்ற ஆற்றை கடக்க தரையிலிருந்து 32 மீற்றர் ஆழத்தில் 520 மீற்றர் நீளத்துக்கு இந்த மெட்ரோ தொடருந்து மார்க்கத்தில் சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக 4,965 கோடி இந்திய ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# யுத்த நிறுத்த பேச்சுக்கு காத்திருக்கும் ஹமாஸ்

## பணயக் கைதிகளை மாற்றிக்கொள்ள ஏற்பாடு

கெய்ரோ, மார்ச் 07

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு காசா பகுதியில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் மூன்றாம் கட்டபேச்சுவார்த்தைக்காக எகிப்து தலைநகர் கெய்ரோவில் ஹமாஸ் தரப்பு தங்கியுள்ளது.

இதேவேளை இஸ்ரேலின் பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் நாற்பது நாட்களுக்கு எதிர்பார்க்கப்படும் யுத்த நிறுத்த காலப்பகுதியில், இருதரப்பினரும் பணயக் கைதிகளை பரிமாறிக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



மேலும் காசாப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளவந்து குடியேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அவர்களுக்கான உதவிகள் கிடைக்கும் என நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புனித ரமழான் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேஸ்புக் செயலிழப்பால் 100 மில். டொலர் இழப்பு!

நியூயோர்க், மார்ச் 07

பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக ஊடகங்கள் செயலிழந்தமையினால் 'மெட்டா' நிறுவனம் 100 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை இழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்கள் நேற்று முன் தினம் திடீரென செயலிழந்தன.

பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் அனைத்தும் ஒரே நேரத்தில் செயலிழந்தது இதுவே முதல் முறை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 'மெட்டா' நிறுவனத்தின் வருமானம் 1.5 சதவீதம் சரிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருவர்மீது மோசமான தாக்குதல்

## 3 ரயில்வே ஊழியர்கள் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 07

**நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் ரயில்வே ஊழியர்கள் சிலரால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 3 ஊழியர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.**

**ரயில் நிலைய அதிபர்கள் இருவர் மற்றும் கட்டுப்பாட்டாளர் ஒருவர் ஆகியோர் இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் எச்.எம். கே.பண்டார தெரிவித்துள்ளார்.**

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த பொடி மெனிக்கே ரயிலில் பயணித்த 2 இங்கிலாந்து பிரஜைகளே நேற்று(05) இந்த சம்பவத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கண்டி ரயில் நிலையத்தில் இருந்தே இவர்கள் ரயிலில் ஏறியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் வினவிய போது, ரயிலின் மூன்றாம் வகுப்பிற்கான பயணச்சீட்டுகளை பெற்றுக்கொண்டு முதலாம் வகுப்பில் பயணித்தமையால் அவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் என்.எம்.ஜே.இதிபொல தெரிவித்தார்.



இந்த விடயம் குறித்து ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்னவிடம் வினவியபோது, குறித்த வெளிநாட்டவர்களை ரயிலில் இருந்து இறங்குமாறு ரயில்வே கட்டுப்பாட்டாளரால் அறிவிக்கப்பட்டபோதிலும் அவர்கள் இறங்க மறுத்ததால் ரயிலில் இருந்து வெளியேற்ற நேரிட்டதாக கூறினார். (அ)

# குளுகோமா தாக்கம் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 07

இலங்கை சனத்தொகையில் சுமார் 5 சதவீதமானோர் குளுகோமா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

நாட்டில் குளுகோமா நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது.

குருட்டுத் தன்மை ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக குளுகோமா காணப்படுகின்றது. உலகளவில் 3.54 சதவீதமானவர்களும், இலங்கையில் சுமார் 5 சதவீதமானோரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பும் ஓர் காணமாக உள்ளது. எனவே, அனைவரும் கண் பரிசோதனையை மேற்கொள்வது மிகவும் முக்கியம். நம் நாட்டில் கண் கோளாறுகளை முன்கூட்டியே கண்டறிந்து அதனை தடுக்கக்கூடிய திட்டங்கள் காணப்படுகின்றன- என்றார். (அ)

# காற்றின் தரம் மிகமோசம்!

கொழும்பு, மார்ச் 07

நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் நாட்டில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி காற்றின் தரக் குறியீட்டின் படி, நேற்று புதன்கிழமை கொழும்பின் காற்று மாசு 127 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலை உணர்திறன் உள்ளவர்களின் ஆரோக்கியத்தில் மோசமான விளைவை ஏற்படுத்தக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும், காலி கராப்பிட்டியில் 90 ஆகவும், புத்தளத்தில் 88 ஆகவும், குருநாகல் மற்றும் அனுராதபுரத்தில் 86 ஆகவும் காற்று மாசு சுட்டெண் பதிவாகியுள்ளது.

அத்துடன் நாட்டின் காற்று மாசுக் குறியீடு 50 ஐத் தாண்டியிருப்பதால், மக்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதால் இது குறித்து கவனம் செலுத்துமாறு அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ)

# கோப்பாய் கலாசாலையில் மகளிர் தின சிறப்பு நிகழ்வு





யாழ்ப்பாணம், மார்ச் 07

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த மகளிர் தினச் சிறப்பு நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை காலை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவியும் யாழ்ப்பாணக் கல்வி வலய சேவைக் கால ஆசிரிய ஆலோசகருமாகிய நளினி அகிலதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வுகளை கணித நெறி ஆசிரிய மாணவர் செல்வரட்ணம் சந்திரகுமார் நெறிப்படுத்தினார். ஆசிரிய மாணவர் உரையினை ஆங்கில நெறி ஆசிரிய மாணவி தினேஸ் கௌசியாவும் விரிவுரையாளர் உரையினை முத்துக்குமாரு ஜெயக்குமாரியும் ஆற்றினர். பிரதம விருந்தினருக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை மேற்கொண்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பெண்கல்விக்கு வழங்கிய பங்களிப்புப் பற்றி கலாசாலை அதிபர் ச.லலீசன் எடுத்துக்கூறி நிறைவுரையாற்றினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி நளினி அகிலதாஸ் கலாசாலைச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் மதிப்பளிக்கப்பட்டார். திருமதி நளினி அகிலதாஸ் இன்று வியாழக்கிழமை அரச பணியில் இருந்து இளைப்பாறுகை பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் சொத்துகள் பொறுப்பு அறிக்கை கோரல்

கொழும்பு, மார்ச் 07

அரசியல்வாதிகள், அரச தரத்திலான அதிகாரிகள் உள்ளிட்ட 150,000 இற்கும் அதிகமானோர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையை கையளிக்க வேண்டும் என இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதி வரை அவற்றை கையளிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டத்திற்கமைய இம்முறை முதல் தடவையாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

அதற்கமைய, புதிய அதிகாரிகள் மற்றும் தனிநபர் பிரிவினர், புதிய சட்டத்தின் கீழ் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையை வழங்க வேண்டியுள்ளது.

ஊழல் எதிர்ப்பு சட்டத்திற்கமைய, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் அடங்கிய சுற்றுநிருபம், இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் www.ciaboc.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையை பதவி விலக அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர், சட்டத்தரணி ஷாந்த நிரியெல்ல உள்ளிட்ட பணிப்பாளர் சபையை பதவி விலகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவினால் இதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, விரைவில் புதிய பணிப்பாளர் சபையை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அந்நியச் செலாவணி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 07

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்நியச் செலாவணி வருமானம் கணிசமாக அதிகரித்துள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த ஆண்டை விட கூட்டுத்தாபனத்தின் டொலர் வருமானம் அதிகரித்துள்ளதாக சமீபத்திய வருமான அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.

கப்பல்களுக்கு எரிபொருளை வழங்கும் நடவடிக்கையின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டதாகவும், இது கூட்டுத்தாபனத்தின் வருமானம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த காலங்களில் எரிபொருள் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் பணியின் மூலம் கணிசமான வருமானத்தை ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உலக சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும் செலவினங்களின் அடிப்படையில் எரிபொருள் விலைச் சூத்திரம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## திருக்கேதீச்சரம்...

இதன்படி, பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து அதிகாலை 5.00 மணி, காலை 9.00 மணி, நண்பகல் 12.00 மணி, பிற்பகல் 3.00 மணி மாலை 6.00 மணிக்கு இந்த சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று பருத்தித்துறை சாலை அறிவித்துள்ளது. (ஐ-02)

## விமானப்..

அதிகளவிலான பாடசாலை மாணவர் கள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சியை நேற்று பார்வையிட்டனர். இந்தக் கண்காட்சியில் விமான படைவீரர்களின் சாகசங்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், ஆளில்லா விமானங்கள், விமானப் படையின் தளபாடங்கள், ஹெலிகொப்டர்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் இந்த கண்காட்சியை முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும் என்பதுடன் ஏனையோர் 100 ரூபாய் கட்டணம் செலுத்தி இந்த கண்காட்சியை பார்வையிட முடியும்.

## மாணவர்...

அரசாங்கத்தை வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றும் இவ்வாறான ஆர்ப்பாட்டமே நடந்தது. இதில், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த மற்றுமொரு மாணவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். எனினும், பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு முன்பாக சில மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ)

## யாழ்....

தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் முன்பாக இழுவைமடி தொழிலுக்கு எதிரான போராட்டத்தை நடத்தியிருந்தோம். இதற்கான தீர்வு எதனையும் இந்திய துணைத் தூதரகம் எங்களுக்கு பெற்றுத்தரவில்லை.

இந்தியத் துணைத் தூதரகத்திடம் நாங்கள் மனு அளித்துள்ளோம். அவர்கள் இன்றுவரை எங்களுக்கு பதில் தரவில்லை. இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் வீசா கொடுப்பதற்கு மட்டும்தான் இருக்கிறது. எங்களுக்கான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

இந்திய மக்களால்தான் எங்களுக்கு பிரச்னையாக உள்ளது. ஆனால், அந்தப் பிரச்னையை தீர்க்குமாறு கூறினாலும் தூதரகம் அதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது. எத்தனையோ தடவை எமது கடற்றொழில் சமூகம் சார்பில் மனுக்களை இந்திய தூதரகத்திடம் கொடுத்துள்ளோம். ஆனால், இன்று வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இனிவரும் நாட்களில் நாங்கள் இந்திய துணை தூதரகம் முன்பாக தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டி ஏற்படும். அவர்களின் சேவைகளை முடக்க வேண்டிய கட்டம் ஏற்படும். ஏனென்றால், இவர்கள் மக்களின் பிரச்னைகளை இதுவரை இந்தியாவின் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லவில்லை - இது எமக்கு மிகவும் கவலையை அளிக்கிறது. எனவே இந்தியத் துணைத் தூதரகம் மத்திய அரசின் பதிலை எமக்குக்கூற வேண்டும் - என்றார்.

## வட,கிழக்கு...

இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இந்த மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. நில ஆக்கிரமிப்பு தொடர்கிறது. விவசாயக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதைப் போல, இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையில் சிக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்னை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்னை, கணவனை இழந்த பெண்கள் முகம் கொடுக்கின்ற பிரச்னை, மீனவர்களின் பிரச்னை போன்றவற்றுக்கு இன்னமும் தீர்வு கிட்டவில்லை. இவற்றுக்கு எவ்வித பதிலையும் வழங்காது அரசாங்கம் கள்ள மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறது - என்று கூறினார். (ஐ)

## இந்தியா...

மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரரின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர்,

வடக்கு மாகாணத்தில் சீன நிறுவனத்துக்கு சூரிய மின்கல திட்டம் வழங்கப்படவில்லை. சீன நிறுவனம் அவ்வாறான கோரிக்கை எதனையும் விடுக்கவில்லை. இதேபோல் வடக்கு மாகாணத்தில் சூரிய மின்கல திட்டத்தை முன்னெடுக்க அதானி நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

வடக்கில் சூரிய மின்கல திட்ட அபிவிருத்தியில் அதானி நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால், உற்பத்தி செய்யப்படும் ஒரு மின் அலகுக்கு 50 ரூபாய் கிடைக்கப்பெறும் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிடுகிறார். ஊடகங்கள் ஏதும் இவ்வாறு பொய்யான செய்தியை வெளியிடவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அதானி நிறுவனம் அவரிடம் தனிப்பட்ட முறையில் இவ்வாறு யோசனைகளை முன்வைத்ததா? என்பதை நாங்கள் அறியவில்லை.

வடக்கு மாகாணத்தில் மின் உற்பத்தித் திட்டத்தை மேம்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதற்கு 10 மில்லியன் டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் வடக்கு மாகாணத்தில் மின் உற்பத்தித் திட்டத்தை மேம்படுத்த 11 மில்லியன் டொலர் நிவாரணத்தை வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விலை மனுகோரல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய நிவாரணத்தால் வடக்கு மாகாணத்தில் அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பயனடைவார்கள். இந்த திட்டத்துக்கு அரசாங்கம் ஒரு சதம்கூட செலவழிக்க தேவையில்லை. அத்துடன், எதிர்காலத்திலும் செலவழிக்க தேவையில்லை. இவ்வாறான நிலையில் இந்த திட்டத்தை ஏன் எதிர்க்க வேண்டும்.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தியால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். சுற்றுச்சூழல் மாசுபடுவதாக இருந்தால் காற்றாலை திட்டத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கினாலும் பாதிப்பு ஏற்படும் தேசிய நிறுவனங்களுக்கு வழங்கினாலும் பாதிப்பு ஏற்படும்.

காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுமாயின் காற்றாலை மின் உற்பத்தி வலயத்தில் இருந்து மன்னாரை நீக்க வேண்டும். ஒரு தரப்பினர் குறைகளை மாத்திரம் முன்னிலைப்படுத்தி அபிவிருத்தி செயல்பாடுகளுக்கு தடையேற்படுத்துகிறார்கள் - என்றார். (ஐ)

# நாட்டில் இறப்பு வீதம் உயர்வடைந்துள்ளது!

## ஐக்கிய மக்கள் சக்தி

பொருளாதார பாதிப்பால் நாட்டில் இறப்பு வீதம் உயர்வடைந்து, பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், சமூக கட்டமைப்பில் மக்கள் வாழும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள் - என்று நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய போது அவர் கூறினார்.

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டு மொத்த சனத்தொகை வளர்ச்சி 1 இலட்சத்து 44 ஆயிரத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. பிறப்பு வீதமும், குறைவடைந்துள்ளது. பொருளாதார பாதிப்பால் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவர்களில் 7,120 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்றார். (ஐ)

## 24 மேலதிக...

விவாதத்தின் முடிவில், பெறுமதி சேர் வரி சட்ட மூலத்துக்கு சபை அனுமதி வழங்குகிறதா? என சபாநாயகர் வினவினார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன வாக்கெடுப்பை கோரினார்.

இதன் பிரகாரம் நடந்த வாக்கெடுப்பில் பெறுமதிசேர் வரி (திருத்த) சட்ட மூலத்துக்கு ஆதரவாக 59 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதனால் 24 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

## முருகன்...

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

இன்றைய நாள் 16 வருடங்களுக்கு முன்னர் எங்களுடைய மண்ணிலே மாமனிதர் கிட்டிணன் சிவநேசன் இலங்கை படையினரால் ஆழ ஊடுருவும் படை என்ற பெயரில் மிக மறைமுகமாக கொலைசெய்யப்பட்டிருந்தார். இந்த பாராளுமன்றத்தின் உறுப்பினராக இருந்த சிவநேசன் அநியாயமாக கொல்லப்பட்டார்.

இதேவேளை இந்தியாவில் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலை ஆகியும் கூட வீடு வர முடியாமல் சில நாட்களுக்கு முன்னர் மரணத்தை தழுவிக் கொண்ட சாந்தனுக்கும் நான் இந்த இடத்திலே எங்களுடைய அஞ்சலிகளை செய்து கொள்கிறேன்

தன்னுடைய தாயைப் பார்க்க - உறவினர்களை பார்க்க - தன்னுடைய ஊரை பார்க்க துடியாய் துடித்த 20 வயதில் புறப்பட்ட இளைஞன் 53 வயதை கடந்து சடலமாக வரவேண்டிய மிகப் பெரிய நெருக்கடியும் ஒரு மன உளைச்சலும் இந்த மண்ணிலே ஏற்பட்டிருப்பது மிகப்பெரிய ஆதங்கம்.

இது தொடர்பாக நான் மனோ கணேசன் எம். பியுடன் சென்று வெளி விவகார அமைச்சர் அலிசப்ரி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் பேசியிருந்தேன். இதேபோல இந்தியாவிலே இருக்கின்ற இலங்கை தூதரகத்தின் தூதரக அதிகாரியையும்கூட தொடர்பு கொண்டு சாந்தனின் வருகைக் காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த முயற்சிகள் தோல்வி கண்டிருந்தன. உயிருடன் வீட் டுக்கு வர ஆசைப்பட்ட சாந்தனின் உயிரற்ற உடல் மட்டும்தான் இங்கு வந்தது என்பது மக்கள் மனங்களிலே மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (ஐ)

## தொடர்வதா, இல்லையா...

அத்துடன், அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களின் பலனாக நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருக்கிறது. எதிர்காலத்தில் மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களைப் பெற்றுகொடுக்க எதிர்பார்த்திருக்கிறேன். அந்த செயல்பாடுகள் அனைத்தும் அறிவியல் முறைமைகளுக்கு அமைய - படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார்.

நேற்று புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 2023ஆம் ஆண்டு முதல் 2027ஆம் ஆண்டு வரை கடன்களை செலுத்தாது இருப்பதற்கான தற்காலிக நிவாரணத்தை நாட்டுக்கு பெற எதிர்பார்த்துள்ளேன். கடன் மறுசீரமைப்புடன் தொடர்புடைய பேச்சுகளை விரைவாக நிறைவு செய்யவும் எதிர்பார்க்கிறேன்.

நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்து, பொருளாதாரம் மாத்திரமன்றி சமூகமும் பெரும் ஆபத்தை எதிர்கொண்டிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் அதனை மீளக் கட்டியெழுப்பும் சவாலை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்காக அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அனைவரும் பின்வாங்கினர். அந்தத் தைரியம் அவர்களுக்கு இருக்கவில்லை. தாம் நாட்டுக்காக அந்த சவாலை ஏற்றுக்கொண்டேன்.

நாட்டின் பொருளாதாரம் 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து மீளெழுச்சி பெற ஆரம்பித்தது. இதற்கமைய 2024ஆம் ஆண்டில் 2 - 3 வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என சர்வதேச நிதி நிறுவனங்கள் கணித்துள்ளன.

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டு அரச வருமானத்தை 50 சதவீதத்துக்கும் மேல் அதிகரிக்க முடிந்தது. கடந்த வருடம் முதன்மை கணக்கில் உபரியை பெற முடிந்தது. இதன்மூலம் 3 முதல் 4 ஆண்டுகளாக அரசாங்கத்துக்கு சேவை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், 2022 செப்ரெம்பர் மாதம் 70 வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் 2024 பெப்ரவரி மாதத்தில் 5.9 வீதமாக குறைவடைந்தது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் நடுப்பகுதியில் 2 கோடி அமெரிக்க டொலர்களுக்கு குறைவாக இருந்த பயன்படுத்தக்கூடிய அந்நியச் செலாவணி கையிருப்பு தற்போது 300 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

தற்போது தனிப்பட்ட பயன்பாட்டுக்கான மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதிகளுக்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

அப்பியாச கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளை வற் வரி பட்டியலில் இருந்து நீக்க எதிர்பார்த்துள்ளேன்.

எரிபொருள், மருந்து, போக்குவரத்து வசதிகள் இன்றி நெருக்கடிகளை அனுபவித்த மக்கள் சமூகம், தற்போது பொருளாதார அபிவிருத்தியின் பிரதிபலனை அனுபவித்து வருகிறது. பொருளாதாரம் வலுப்பெறும்போது மக்களுக்கு படிப்படியாக சலுகைகளை வழங்க முடியும். சலுகைகளை வழங்கியதன் பின்னர் மீண்டும் பொருளாதாரம் வீழ்ச்சியடையக் கூடாது என்பதன் காரணமாக அறிவுபூர்வமான செயல்பாடுகளை முன்னெடுக்கிறோம்.

இந்தப் பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதா, இல்லையா என்பதை சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்வதா என்பதனை தீர்மானிக்க வேண்டும்.

நான் பிரபல்யம் அடைவதற்காக இதனை செய்யவில்லை. நான் ஒரு போதும் அதிகாரத்துக்காக பொய் கூறுவதில்லை. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களால் சமூகத்தில் ஒரு சிலருக்கு அழுத்தங்கள் இருக்கக்கூடும் என்பதை புரிந்து கொண்டுள்ளேன். தனிநபர்களின் பொருளாதார பிரச்னை களை தீர்ப்பது சரியான முறையல்ல - அது நீண்டகால தீர்வாக அமையாது -என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழக அரசின் கோரிக்கையை நிராகரித்தார் அமைச்சர் டக்ளஸ்

## இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கமுடியாதென தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

**இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு தமிழக அரசாங்கம் விடுத்த கோரிக்கையை நிராகரித்ததாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் தொலைபேசியூடாக இந்த கோரிக்கையை விடுத்ததாக அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் வரை இலங்கை கடலுக்குள் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குமாறு தமிழக மீன்வளத்துறை அமைச்சர் தொலைபேசி கலந்துரையாடலில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் செயற்பாடு நிறுத்தப்படுமென தமிழக அரசாங்கம் உறுதியளிக்கும் பட்சத்தில் மாத்திரமே மீனவர் பிரச்னை தொடர்பில் கலந்துரையாட முடியும் என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய - இலங்கை மீனவர் பிரச்னை தொடர்பில் இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

2022 மார்ச் மாதத்தில் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் இறுதியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து ஜி.பி.எஸ் கருவிகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றத்திற்காக 5 இந்திய மீனவர்களுக்கு அண்மையில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தமிழக மீனவர்களை விடுதலை செய்யுமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தையும் பணிப்பகிஷ்கரிப்பையும் முன்னெடுத்திருந்தனர்.

இதனிடையே, இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை தடுத்து நிறுத்துமாறு கோரி இலங்கை மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை கடலில் கறுப்புக் கொடி ஏந்தி போராட்டம் நடத்தியிருந்தனர்.

இலங்கை மீனவர்களின் எதிர்ப்பின் காரணமாக இலங்கை கடற்பரப்பிற்குள் உள்நுழையும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டினார். (அ)

## திடீர் சுகவீனத்தால் யாழில் 4 மாத குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 07

திடீர் சுகவீனம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நான்கு மாதக் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த குழந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## கிளிநொச்சியில் நேற்று மிளகாய் அறுவடை விழா



கிளிநொச்சி, மார்ச் 07

கிளிநொச்சி முழங்காவில் கரியாலை நாகபடுவான் பகுதியில் மிளகாய் அறுவடை விழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

முழங்காவில் விவசாய போதனாசிரியர் ம.மகிழன் தலைமையில் நடைபெற்ற குறித்த அறுவடை நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. புவிதன், முழங்காவில் மறு வயற் பயிர் மற்றும் உற்பத்தியாளர் அமைப்பின் தலைவர் சி.சிறிரங்கநாதன், குறித்த பகுதி விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## இந்திய ஆதீனங்கள் கிழக்குக்கு வருகை!



திருமலை, மார்ச் 07

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் திருக்கோணேஸ்வரம் இலங்கையின் புகழ்பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. உலகில் உள்ள வழிபாட்டுத்தலங்களில் மிகப்பழமையானதாகும்.இக்கோவில் பதினெட்டு மகா சக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும் தந்திர சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இக்கோயிலின் மீது பதிகங்கள் பாடியுள்ளார்.

இவ்வாறு வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வர ஆலயத்தில் இடம்பெற்று வருகின்ற சிவராத்திரி நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் இந்தியாவில் இருந்து ஆதீனங்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

நேற்று முன் தினம் சிவராத்திரி நிகழ்வில் தமிநாடு திருநெல்வேலி பெருங்குளம் திருக்கைலாய பரம்பரை செங்கோல் ஆதீனம்,103வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சத்தியஞான தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீக சொற்பொழிவை வழங்கினார்.

பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு வருகின்றனர். (அ)

## பள்ளிமுனை மீனவர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

மன்னார், மார்ச் 07

மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க கோரி குறித்த கிராம மக்களால் நேற்றுக் காலை கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பள்ளிமுனை புனித லூசியா மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராட்டமானது பள்ளிமுனை மீன் சந்தை கட்டிடத் தொகுதிக்கு முன்பாக குறித்த கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் மாவட்ட செயலகம் வரை அமைதியான முறையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் முந்தல் காணி எல்லை மற்றும் பாரம்பரிய வழிபாட்டு உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளமை மற்றும் சிறு தொழில் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக அமைக்கப்பட்டுள்ள கரையோர கடலட்டைப் பண்ணை





போன்றவற்றை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த பிரச்னைகள் குறித்து ஏற்கனவே மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் ஆராயப்பட்டு துரித நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என குறித்த கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இப் போராட்டத்தில் பள்ளிமுனை பங்குத்தந்தை, கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் என பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (அ)

## ஆட்சி மாற்றத்தின் அனுபவத்தை புத்தகமாக வெளியிடும் கோட்டா!




கொழும்பு, மார்ச் 07

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட காலத்திலிருந்து, சில வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சக்திகள் தன்னை ஆட்சியில் இருந்து நீக்கும் நோக்கத்துடன் செயற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், "ஜனாதிபதி பதவியில் இருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி" என்ற தலைப்பில் புத்தகமொன்றை வெளியிடவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது வெளிநாட்டுத் தலையீடும், அரசியலின் சூழ்ச்சியும் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி பதவில் இருந்து தன்னை வெளியேற்றுவதற்கு நடத்தப்பட்ட போராட்டம் இலங்கை அரசியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், சர்வதேச ரீதியில் அனுசரணையளிக்கப்பட்ட ஆட்சி மாற்ற நடவடிக்கையின் முதல் அனுபவத்தை புத்தகமாக வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

## சபை அமர்வில் பங்கேற்க அலி சப்ரி ரஹீமுக்கு தடை!

கொழும்பு, மார்ச் 07

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், நேற்று தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு பாராளுமன்ற சபை அமர்வுகளில் பங்கேற்க முடியாதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷவினால் 2024 ஜனவரி 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் இந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டுபாயிலிருந்த 3.5 கிலோகிராம் தங்கம் மற்றும் 91 கையடக்க தொலைபேசிகளை சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டு வந்தபோது, சுங்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு, அபராதம் செலுத்திய பின்னர் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

எனினும் இதற்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரிடம் கோரிக்கை கடிதமொன்றை சமர்ப்பித்திருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினருக்கான ஒழுக்க விதிகளை அலி சப்ரி ரஹீம் முழுமையாக மீறியுள்ளதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் கட்டளைச் சட்டங்களுக்கு இந்நிலையில் அலி சப்ரி ரஹீமின் பாராளுமன்ற வருகை இன்று தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பராக் மாஸ்டர்ஸ் சதுரங்கம் பிரக்ஞானந்தா 2ஆவது இடத்தில்!



பராக், மார்ச் 07

பராக் மாஸ்டர்ஸ் சர்வதேச செஸ் போட்டி செக்குடியரசு நாட்டில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 வீரர்கள் ரவுண்ட் றொபின் லீக் முறையில் மோதுகிறார்கள்.

இதன் 6ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய கிராண்ட் மாஸ்டரான சென்னையை சேர்ந்த பிரக்ஞானந்தா உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசத்தரோவை எதிர்கொண்டார்.

கறுப்பு நிற காயுடன் ஆடிய பிரக்ஞானந்தா 56 ஆவது நகர்த்தலில் அப்துசத்தரோவை தோற்கடித்தார். பிரக்ஞானந்தாவுக்கு இது 3ஆவது வெற்றியாகும்.

இந்த சுற்றுப் போட்டியில் பிரக்ஞானந்தா இரண்டாவது இடத்தில் உள்ளார். 6 சுற்று முடிவில் நோடிர்பெக் அப்துசத்தரோவ் 4 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். (ஐ)

# இந்திய அணிக்கு எதிரான இங்கிலாந்து அணி அறிவிப்பு



தர்மசாலா, மார்ச் 07

இந்திய அணிக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி இந்தியா வில் சுற்றுப் பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் 3-1 என்ற கணக்கில் இந்திய அணி தொடரை கைப் பற்றி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று தர்மசாலாவில் தொடங்கவுள்ளது.

இந்தியா ஏற்கனவே தொடரை கைப்பற்றி விட்டாலும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கு இந்த டெஸ்டின் மூலம் கிடைக்கும் புள்ளி இரு அணிகளுக்கும் முக்கிய மானதாகும். எனவே, இந்த போட்டியில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாக போராடும் என்பதால் ரசிகர்கள் மத்தியில் இது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் இந்த போட்டியில் விளையாடும் வீரர்களை இங்கிலாந்து அறிவித்துள்ளது.

அணி விவரம் -

ஜாக் கிராவ்லி, பென் டக்கெட், ஒல்லி போப், ஜோ ரூட், ஜொன்னி பெயர்ஸ்ரோ, பென் ஸ்டோக்ஸ் (கேப்டன்), பென் போக்ஸ், ரொம் ஹார்ட்லி, மார்க் வுட், ஜேம்ஸ் அண்டர்சன், சொஹைப் பஷீர். (ஐ)

# ஐ. சி. சியின் டெஸ்ட் தரவரிசை: இந்திய வீரர்கள் முன்னேற்றம்



டுபாய், மார்ச் 07

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ. சி. சி.) டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை நேற்று வெளியிட்டது.

இதில் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்கள் முன்னேற்றம் கண்டிருந்தாலும், அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்ட வீரர்கள் பின்னடைவை சந்தித்துள்ளனர். அதன்படி அவுஸ்திரேலிய அணியின் ஸ்டீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட், மோர்னஸ் லபுஷாக்னே ஆகியோர் பின்னடைவை சந்தித்துள்ளனர்.

இங்கிலாந்தின் ஜோ ரூட் 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். மேலும் 2ஆம் இடத்தில் இருந்த ஸ்டீவ் ஸ்மித் ஓர் இடம் பின் தங்கி 3ஆம் திகதிக்கு தள்ளப்பட்டுள்ளார். அதேசமயம் இந்திய அணியின் நட்சத்திர வீரர்கள் விராட் கோலி, யஷஸ்வி ஜெய்ஸ்வால், ரோகித் சர்மா ஆகியோர் முன்னேற்றம் கண்டுள்ளனர். முதல் 10 இடங்களில் 2 இந்திய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால் 2 இடங்கள் முன்னேறி முதன்முறையாக 10ஆம் இடத்துக்கு முன்னேறினார். விராட் கோலி ஓரிடம் முன்னேறி 8ஆவது இடத்தையும் ரோஹித் 2 இடங்கள் முன்னேறி 11ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். (ஐ)



# முத்தரப்பு கிரிக்கெட்: நெதர்லாந்து சம்பியன்!

காத்மண்டு, மார்ச் 07

நேபாளம் அணியை 4 விக்கெட்களால் வீழ்த்தி முத்தரப்பு கிண்ணத்தை கைப்பற்றியது நெதர்லாந்து.

நெதர்லாந்து, நமீபியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் மோதிய முத்தரப்பு இருபது - 20 தொடர் நேபாளத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் நெதர்லாந்து, நேபாளம் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற நேபாளம் முதலில் துடுப்பெடுத் தாடியது.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 184 ஓட்டங்கள் எடுத்தது. ஆசிப் ஷேக் 47 ஓட்டங்களும் குல்சன் ஜா 34 ஓட்டங்களும் எடுத்தனர்.

185 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நெதர்லாந்து 19.3 ஓவரில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 189 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. தொடக்க ஆட்டக்காரர் லெவிட் அரை சத மடித்து 54 ஓட்டங்கள் எடுத்தார். சைப்ரண்ட் 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதன்மூலம் 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற நெதர்லாந்து சம்பியன் பட்டத்தை வென்றது. (ஐ)

# ரிஷப் பந்தின் ஆட்டத்தை பென் டக்கெற் பார்க்கவில்லை!



தர்மசாலா, மார்ச் 07

பென் டக்கெற் ரிஷப் பந்தின் ஆட்டத்தைப் பார்க்கவில்லை போலும்... என்று கூறி பதிலடி அளித்துள்ளார் இந்திய அணியின் ரோஹித் சர்மா.

இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. முன்னதாக நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா கூறுகையில்,

இந்திய வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் அடுத்தடுத்து 2 அதிரடி இரட்டை சதங்களை இங்கிலாந்துக்கு எதிராக விளாசித் தள்ளியது. குறிப்பாக, அவர் ஆடிய அதிரடி முறை பல பாராட்டுகளை ஈர்த்தது.

இதேநேரம், இங்கிலாந்து தொடக்க வீரர் பென் டக்கெட், "எதிரணியிலிருந்து வீரர்கள் இப்படி ஆக்ரோஷமாக ஆடுவதைப் பார்க்கும்போது நாம் கொஞ்சம் அதற்கான பெருமையை எடுத்துக் கொள்ளலாம் என்று உணர்வு ஏற்படுகிறது. அதாவது மற்றவர்கள் டெஸ்ட் கிரிக்கெட் ஆடும் விதத்துக்கும் நாம் ஆடும் விதத்துக்குமான வித்தியாசத்துக்கான பெருமை நம்முடையது என்ற உணர்வு ஏற்படுகிறது" என்று கூறினார்.

பென் டக்கெட்டின் இந்தக் கருத்துக்கு பதிலளித்த ரோஹித் சர்மா, "எங்கள் அணியில் ரிஷப் பந்த் என்று ஒருவர் இருந்தார். ஒருவேளை பென் டக்கெட் அவர் விளையாடுவதைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை. அதனால் அப்படி ஒரு கருத்து தெரிவித்துள்ளார்" என்று கூறினார். (ஐ)

# இந்திய-பாகிஸ்தான் அணு ஆயுத முறுகல்:

## பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் மும்பையில் பறிமுதல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பாகிஸ்தான் மீது இந்தியா ராணுவ நடவடிக்கை எடுத்தால், இந்தியாவை குறி வைத்து 130 அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகளை செலுத்த பாகிஸ்தானிடம் வல்லமை இருப்பதாக கடந்த சில வருடங்களுக்கு முன்பாக அமெரிக்க உளவுஅமைப்பு தெரிவித்தது.

தென்னாசியாவில் அணுஆயுத போர் வந்தால் இந்தியா, பாகிஸ்தானை சமாளிப்பது கடினம் என்றும் தற்போது பாகிஸ்தானிடம் 120 முதல் 160 அணு ஆயுதங்கள் உள்ளனவாம். அதற்கு மேலாக இன்னும் கூட பாகிஸ்தான் அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது.

ராணுவ பலம் மிகுந்த இந்தியாவை, அணு ஆயுதம் மூலமாகத்தான் கட்டுப்படுத்த முடியுமென்பது பாகிஸ்தானின் திடமான நம்பிக்கை.

அதனால்தான் அணு ஆயுதங்கள் உற்பத்தியை, பாகிஸ்தான் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகிறது. அத்துடன் அணுபிளவு ஆயுதங்களை தயாரிப்பதிலும் பாகிஸ்தான் கூடுதல் ஆர்வம் காட்டி வருவதும் சர்வதேச நாடுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் பாகிஸ்தானை பொறுத்தவரை எப்போதுமே அரசியல் நிலையற்றத் தன்மை நிலவுவதால், அணு ஆயுத தளவாடங்களின் பாதுகாப்பு குறித்த கேள்விகள் எழுவே செய்கின்றன. இந்தியா கடந்த 2022ம்ஆண்டில் ஆறு அணு அயுதங்களை உருவாக்கியுள்ளது. தற்போது 156 அணு ஆயுதங்கள் இந்தியாவிடம் உள்ளன. பாகிஸ்தான் இதே ஆண்டில் ஐந்து அணு ஆயுதங்களை உருவாக்கியுள்ளது. அந்நாட்டில் தற்போது 165 அணு ஆயுதங்கள் உள்ளன.

அணு ஆயுத பலப்பரிட்சையில் இருநாடுகளிடையே நீண்ட முறுகல் நிலவுகிறது. தற்போது இதன் உச்சக்கட்டமாக, சீனாவில் இருந்து அனுப்பப்பட்ட பாகிஸ்தானின் அணு ஆயுத திட்டத்திற்கான தளவாடங்கள் மும்பை துறைமுகத்தில் பறிமுதல் செய்ததை பாகிஸ்தான் அரசு கடுமையாக ஆட்சேபித்துள்ளது.


கராச்சிக்கு செல்ல, அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை தயாரிப்பு திட்டங்களில் தொடர்புடைய இரட்டை பயன்பாட்டு சாதனங்களுடன் சீனாவில் இருந்து வந்த கப்பல் இந்திய அரசால் மும்பை துறைமுகத்தில் தடுத்து நிறுத்திபட்டுள்ளமை பாரிய முறுகலை தோற்றுவித்துள்ளது.




**சீனாவில் இருந்து பாகிஸ்தான் சென்ற கப்பல்:**

சீனாவில் இருந்து பாகிஸ்தானுக்கு அணு ஆயுதம் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை தயாரிக்க பயன்படுத்தும் இரட்டை பயன்பாட்டு பொருட்கள் சரக்கு கப்பலில் அனுப்பப்பட்டிருப்பதாக இந்திய உளவுத்துறைக்கு தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இக்கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சீனாவில் இருந்து பாகிஸ்தானுக்கு ராணுவ பயன்பாட்டு பொருட்கள் அனுப்பப்பட்ட சரக்குகளை இந்திய துறைமுக அதிகாரிகள் பறிமுதல் செய்யும் சம்பவங்கள் பலமுறை நடந்துள்ளன.

மும்பை நவா ஷேவா துறைமுகத்தில் இந்திய சுங்க அதிகாரிகள் மால்டா நாட்டு கொடியுடன் கடந்த மாதம் 23ம் திகதி வந்த கப்பலை தடுத்து நிறுத்தி ஆய்வு செய்தனர். அதில், இத்தாலி நிறுவனத்தின் தயாரிப்பான




> அணு ஆயுத பலப்பரிட்சையில் இருநாடுகளிடையே நீண்ட முறுகல் நிலவுகிறது. தற்போது இதன் உச்சக்கட்டமாக, சீனாவில் இருந்து அனுப்பப்பட்ட பாகிஸ்தானின் அணு ஆயுத திட்டத்திற்கான தளவாடங்கள் மும்பை துறைமுகத்தில் பறிமுதல் செய்ததை பாகிஸ்தான் அரசு கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

கம்ப்யூட்டர் நியூமரிகல் கன்ட்ரோல் மெஷின் (சிஎன்சி) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பொதுவாக இந்த கருவியை வடகொரியா தனது அணு ஆயுத திட்டங்களில் பயன்படுத்துவது வழக்கம்.

பாகிஸ்தானில் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை தயாரிப்பு திட்டங்களுக்காக இந்த உபகரணங்கள் சீன நிறுவனத்தில் இருந்து கராச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என இந்திய அதிகாரிகள் சந்தேகித்துள்ளனர். சிஎன்சி கருவிகள், சர்வதேச ஆயுத கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் வருபவை. எனவே, 22,180 கிலோ எடையுள்ள இந்த உபகரணங்களை இந்திய சுங்கத்துறை பறிமுதல் செய்துள்ளது.

**பாகிஸ்தான் அணு ஆயுத சாதனங்கள்:**

ஐரோப்பிய நாடான மால்டாவை சேர்ந்த சரக்கு கப்பல் சீனாவின் ஷெகோவ் துறைமுகத்தில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி நகருக்கு புறப்பட்டது. இந்த சரக்கு கப்பல் கடந்த ஜனவரி 23-ம் தேதி இந்தியாவின் மும்பை துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலில் உள்ள தளவாடங்கள் சுங்கத் துறை அதிகாரிகள் பரிசோதனை செய்தபோது சந்தேகம் எழுந்தது. உடனடியாக பாதுகாப்புத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.




மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பை (டிஆர்டிஓ) சேர்ந்த நிபுணர்கள் மும்பை துறைமுகத்துக்கு வந்து சந்தேகத்துக்குரிய தளவாடங்களை ஆய்வு செய்தனர்.

இக் கப்பலில் தெர்மோஎலெக்ட்ரிக் தளவாடங்கள் இருப்பது தெரியவந்தது. அவற்றின்மூலம் அணு ஆயுத தயாரிப்புக்கு தேவையான யுரேனியத்தை செறிவூட்ட முடியும். சம்பந்தப்பட்ட தெர்மோஎலெக்ட்ரிக் தளவாடங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மால்டாவை சேர்ந்த சரக்கு கப்பல் மட்டும் விடுவிக்கப்பட்டது.

இதுகுறித்து இந்திய மத்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தகவல்களின்படி, பாகிஸ்தான் ராணுவம் தொடர்ந்து அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது. அந்த நாட்டுக்கு தேவையான அணு ஆயுததளவாடங்களை விநியோகம் செய்ய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் சார்பில் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

சீனாவில் இருந்து பாகிஸ்தானுக்கு அணு ஆயுத தளவாடங்கள் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக கடந்த ஆண்டு ஜூனில் 3 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு தடை விதித்தது.

ஆனால் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் என்ற பெயரில் அணு ஆயுத தயாரிப்புக்கு தேவையான இயந்திரங்களை பாகிஸ்தானுக்கு சீனா தொடர்ந்து அனுப்பி வருகிறது.

தற்போது சீனாவை சேர்ந்த ஷாங்காய் ஜேஎக்ஸ்இ லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தில் இருந்து பாகிஸ்தானை சேர்ந்த பாகிஸ்தான் விங்ஸ்பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்கு அணு ஆயுத தயாரிப்புக்கு தேவையான தளவாடங்கள் அனுப்பப்பட்டு உள்ளன. அவை தற்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சீனா அனுப்பிய தளவாடங்கள் மூலம் அணு ஆயுதங்களை சுமந்துசெல்லும் ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணைகளையும் தயாரிக்க முடியும்.

**சர்வதேச சட்ட விதிமீறல்:**

கடந்த 2020-ம் ஆண்டு பிப்ரவரியில் சீனாவின் இருந்து பாகிஸ்தானுக்கு கப்பலில் அனுப்பப்பட்ட ஏவுகணை தயாரிப்புக்கு தேவையான தளவாடங்கள் குஜராத்தின் கண்ட்லா துறைமுகத்தில் பறிமுதல் செய்யப்பட்டன.

தற்போது அணு ஆயுத தயாரிப்புக்கு தேவையான தளவாடங்களை பாகிஸ்தானுக்கு சீனா அனுப்பி வைத்திருக்கிறது. இதே வகை அணுஆயுத தளவாடங்களை வடகொரியா பயன்படுத்தி வருகிறது. அந்த நாட்டுக்கும் சீனாவே மறைமுகமாக உதவி செய்து வருகிறது.



அணு ஆயுத தளவாடங்களை சரக்கு கப்பலில் அனுப்பியது சர்வதேச சட்ட விதிமீறல் ஆகும். இவற்றையே மும்பை சுங்கத் துறை அதிகாரிகளின் தீவிர கண்காணிப்பால் அவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

இருநாடுகளிடையே நீண்டகாலமாக போர் முறுகல் நிலவுகிறது. தற்போது இதன் உச்சக்கட்டமாக அணு ஆயுத பலப்பரிட்சையில் இருநாடுகளும் இறங்கியுள்ளன. சீனாவில் இருந்து அனுப்பப்பட்ட பாகிஸ்தானின் அணு ஆயுத திட்டத்திற்கான தளவாடங்கள்

மும்பை துறைமுகத்தில் பறிமுதல் செய்ததை பாகிஸ்தான் அரசு கடுமையாக ஆட்சேபித்துள்ளது. ●

# தொலைநோக்கு இருந்தால் மாத்திரம் போதாது
# நம்பிக்கையைப் பெறுவதும் நல்லிணக்கத்துக்கு அவசியம்





**கலாநிதி ஜெகான் பெரேரா**

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த மதங்களுக்கு இடையிலான குழுக்களின் 300 க்கும் அதிகமான உறுப்பினர்கள் கலந்துகொண்ட மகாநாடொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய நல்லிணக்கத்துக்கான தனது திட்டத்தை 20 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் சுருக்கமாக விளக்கிக் கூறினார்.

அவரின் பேச்சு மிகவும் தெளிவானதாக இருந்தது. குறிப்பு எதையும் அவர் வைத்திருக்கவில்லை என்பதுடன் பேச்சில் தேவைக்கு மிகையாக வார்த்தைகளை பயன்படுத்தவுமில்லை.

இனவெறியும் மதவெறியும் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு அரசியல்வாதிகளுக்கும் தங்களது அதிகாரத்தைப் பேணுவதற்கு மதத் தலைவர்களுக்கும் எவ்வாறு வசதியான கருவிகளாக மாறியிருக்கின்றன என்பதை ஜனாதிபதி விளக்கினார். மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்கு இந்த தந்திரோபாயங்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததன் விளைவாக பேரழிவைக் கொண்டுவந்த மோதல்களில் இருந்து பெபறப்பட்ட படிப்பினைகளை அவர் சுட்டிக்காட்டினார்.

சபையோரிடமிருந்து வந்த இரு கேள்விகளுக்கு பதிலளித்த அவர் மகாநாட்டு ஏற்பாட்டாளர்கள் நன்றி கூறுவதற்கு முன்னதாகவே மேடையில் இருந்து இறங்கி அடுத்த கூட்டத்தில் பங்கேற்கச் சென்றுவிட்டார்.

நல்லிணக்கத்துக்கு நெருக்கமாக நாடு வந்திருப்பதாக தனதுரையில் குறிப்பிட்ட ஜனாதிபதி முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகளை தொடர்ந்து விபரித்தார்.

காணாமல் போனவர்களினதும் விடுதலை புலிகளின் வன்முறைகளில் பங்கேற்றதாக சந்தேகிக்கப்பட்டவர்கள் அல்லது குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் தொடர்பிலான பிரச்சினைகள் இருக்கின்றன. மாகாண சபைகளுடனும் அவற்றின் அதிகாரங்களுடனும் தொடர்புடைய பிரச்சினைகளும் இருக்கின்றன.

தற்போதைக்கு மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை பரவலாக்கமுடியாது. ஆனால் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாணங்களுக்கும் பொதுவானவையாக இருக்கும் அதிகாரங்களின் பட்டியலில் மாகாணசபைகளுக்கு பாதகமாக அமைந்திருக்கும் அதிகாரங்கள் குறித்து தீர்மானிக்கமுடியும். அதை நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை என்று விக்கிரமசிங்க கூறினார்.

இந்த பணிகளில் எதுவுமே சுலபமானவை இல்லை. அவை குறித்து பல்வேறு அரசாங்கங்களின் தலைவர்கள் பல்வேறு வழிகளில் உறுதியளித்தார்கள். ஆனால் தேக்க நிலையிலேயே இருக்கின்றன. ஜனாதிபதியின் பதவிக்காலமும் அதற்கு விதிவிலக்கு இல்லை.

குறுகியதும் இரத்தினச் சுருக்கமானதுமான தனது உரையில் ஜனாதிபதி தேசிய நல்லிணக்கத்துக்காக தனது மனதில் இருக்கும் முழுத்திட்டத்தையும் விபரித்தார்.

அமைக்கப்படவிருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான பொறிமுறை, காணிப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நடைமுறைப்படுத்த வேண்டிய காணி ஆணைக்குழு சட்டத்தின் நிறைவேற்றம், இனப்பிரச்சினைக்கு பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அம்சங்களை விளக்கி சில பௌத்த மதகுருமார்களினாலும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களினாலும் கூட்டாக முன்வைக்கப்பட்ட இமாலயப் பிரகடனம் பற்றியும் அவர் பேசினார். பல்வேறுபட்ட அரசியல் மற்றும் கோட்பாட்டு பின்புலங்களைக் கொண்ட மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் முன்னிலையில் தனது சிந்தனைகளைப் பகிரங்கமாகக் கூறுவதற்கான நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.

### மங்கலான எதிர்காலம்

நாட்டில் முன்னென்றும் இல்லாத வகையிலான ஒரு நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற நாளில் இருந்து விக்கிரமசிங்க ஒரு தீர்க்கமான முறையில் சலால்களுக்கு முகங்கொடுத்து வந்திருக்கிறார். நாட்டை வீழ்ச்சியின் விளிம்புக்கு கொண்டுசென்ற டொலர் தட்டுப்பாடு, இறக்குமதிகள், வீதிப்போராட்டங்களின் விளைவாக சீர்குலைந்த சட்டம் ஒழுங்கை மீள நிலைநிறுத்தல், இன்றைய உலகில் வல்லாதிக்க நாடுகளுக்கு இடையாலான புவிசார் அரசியல் போட்டாபோட்டி ஆகியவை சவால்களில் முக்கியமானவை.

அந்த சவால்களை ஜனாதிபதி கையாண்ட முறை அவரது கொள்கைகளை முன்னர் எதிர்த்தவர்களின் பாராட்டைக் கூட பெற்றது. நாட்டில் உறுதிப்பாட்டை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் காரணமாக மக்கள் செல்வாக்கைப் பொறுத்தவரை அவர் தனது அரசியல் போட்டியாளர்களை விடவும் பின்தங்கிய நிலையில் இருப்பதையே கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன.

உயர்ந்த விலை கொடுத்து ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டை வளங்களைப் பெருமளவில் பாய்ச்சாமல் தக்கவைக்க முடியாது. ஆனால் அவ்வாறு வளங்களை தற்போது காணக்கூடியதாக இல்லை.

கடந்த இரு வருடங்களாக வறுமை மட்டம் 13 சதவீதத்தில் இருந்து 27 சதவீதமாக இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்திருக்கிறது. சிறுவர்களின் நிறைகுறைவு, மந்தபோசாக்கு போன்ற உயிராபத்தைக் கொண்டுவரக்கூடிய பிணிகளினால் உலகில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்குகிறது என்று அண்மைய ஆய்வொன்று கூறுகிறது. இந்த கவலைக்குரிய நிலைவரம் நாட்டில் மூன்று வருடங்களுக்கும் கூடுதலான காலமாக நீடிக்கிறது. இதற்கு தற்போதைய அரசாங்கம் உட்பட அடுத்தடுத்து பதவியில் இருந்த அரசாங்கங்கள் குற்றப் பொறுப்புடையவை.

1990 - 2022 காலப்பகுதியில் அதாவது 33 வருடங்கள் இலங்கையின் நிலைவரத்தை ஆராய்ந்து கண்டறியப்பட்ட இந்த விபரங்கள் பிரிட்டிஷ் மருத்துவச் சஞ்சிகையான “த லான்செற்” றில் பெப்ரவரி 29 வெளியிடப்பட்டன. அதில் உலகளாவிய சிறுவர்கள் மத்தியிலான நிறைகுறைவில் இந்தியாவுக்கு அடுத்ததாக இலங்கை இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. 5 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகள் மத்தியில் மிகவும் ஆபத்தான அளவுக்கு நிறைக்குறைவு இருக்கிறது. இந்த ஆய்வை உலக சுகாதார நிறுவனம் செய்திருக்கிறது.

இத்தகைய வேதனைமிகு சூழ்நிலைக்கு மத்தியிலும் ஊழலுக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் உயர் மட்டத்திலும் கீழ்மட்டத்திலும் ஊழல் முடிவின்றி தொடரவே செய்கிறது. இந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை நல்லிணக்கச் செயன்முறைகள் முன்னெடுக்கப்படாமல் இருக்கும் போக்குடன் ஒப்பிடலாம்.

உதாரணத்துக்கு, வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களின் நலன்களில் கவனத்தைச் செலுத்தவேண்டிய பொறுப்பைக் கொண்ட இழப்பீட்டு அலுவலகம் (Office of Reparations) அறகலய போராட்டத்தின்போது கும்பல்களின் வன்முறைகளில் தீக்கிரையான வீடுகளுக்கு சொந்தக்காரர்களான அரசாங்க அரசியல்வாதிகளின் பிரச்சினைகளைக் கையாள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

காணாமல் போனோர் விவகார அலுவலகம் காணாமல் போனார் பட்டியலைக் கையாளுவதில் பெருமளவு பணிகளைச் செய்திருக்கின்ற போதிலும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் இரகசியமாகவே தொடருகிறது.

### தாமதிக்கமுடியாது

நல்லிணக்கத்தில் வன்பொருளும் மென்பொருளும் இருக்கிறது. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் விவகார அலுவலகம் போன்ற நிறுவனங்களும் பொறிமுறைகளும் மற்றும் சமத்துவம், மதவழிபாட்டுக்கான சுதந்திரம் தொடர்பிலான அரசியலமைப்பு ஏற்பாடுகளைப் போன்ற சட்டங்களும் வன்பொருளைக் கொண்டிருக்கின்றன.

நல்லிணக்கத்துக்கு அவசியமான வன்பொருள் பற்றிய ஜனாதிபதியின் புரிதலை கருத்தரங்கில் அவர் நிகழ்த்திய உரை வெளிக்காட்டியது. ஆனால், நல்லிணக்கத்துக்கான மென்பொருளின் தேவை ஒன்றும் இருக்கிறது.

அவை மென்பொருள் செயற்திட்டங்களே. அவை இல்லாவிட்டால் கம்பியூட்டர்கள் வெற்றுக்கோதுகள் மாத்திரமே. நல்லிணக்கத்தைப் பொறுத்தவரை முக்கியமான மென்பொருள் நம்பிக்கையே ஆகும். இதை இயந்திரத்துக்கு பயன்படுத்தும் எண்ணெயுடன் ஒப்பிடலாம். எண்ணெய் இல்லாவிட்டால் இயந்திரம் அதை செயற்படுத்தத் தொடங்கிய உடனேயே நின்றுவிடும்.

வழங்கிய உறுதிமொழிகளை தாமதமின்றி நிறைவேற்றுவதே நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு முதல் வழியாகும்.

இரு மாதங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் ஒன்றின்போது கால்நடை வளர்ப்பாளர்களின் மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதாகவும் அவர்களின் நிலங்களை அரச இயந்திரத்தின் ஆதரவுடன் ஆக்கிரமித்திருக்கும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மாற்று நிலங்கள் வழங்கஅரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஆனால், அந்த மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமித்த வெளி மாவட்டங்களின் விவசாயிகள் அதற்கு உரிமைகோர முடியாது என்று நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பித்த போதிலும் பிரச்சினை இன்னமும் தொடருகிறது.

கிழக்கில் மாத்திரமல்ல நாடுபூராவும் சட்டத்தையும் அவற்றின் கீழ் இயங்கும் நிறுவனங்களையும் மதித்துச் செயற்படுவதை அரசாங்கம் நடைமுறையில் காண்பிக்கவேண்டும். மத்தியில் ஆட்சியுறையிலும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகள் ஜனாதிபதியினாலும் அரசாங்கத்தினாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன.

இரண்டாவதாக, இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பது மற்றும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் கருத்தொருமிப்பைக் காண்பது தவிர்க்க முடியாத ஒரு தேவையாகும். அரசியல் சமுதாயத்தின் பரந்துபட்ட பிரிவுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மதத்தலைவர்களுடனும் சிவில் சமூகத் தலைவர்களுடனும் தங்களது சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு களமாக அமைந்த மதங்களுக்கு இடையிலான கருத்தரங்கு கருத்தொருமிப்பு என்பது காணப்படக்கூடியதே என்பதற்கு ஒரு தெளிவான அறிகுறியாகும்.

அரச பொறிமுறைகள் மீது நம்பகத்தன்மை ஏற்படுவதற்கு வாய்ப்பான சூழ்நிலையை உருவாக்கவல்ல ஜனநாயக விழுமியங்கள், மனித உரிமைகள் நியமங்கள் மற்றும சிவில் சமூகச் சுதந்திரங்களை பாதுகாப்பதற்கு கருத்தொருமிப்பைக் காணவேண்டிய தேவை இருக்கிறது.

காலஞ்சென்ற பேராசிரியர் ஜொஹான் கல்துங் கூறிய நேர்மறையான சமாதானத்தை அத்தகைய கருத்தொருமிப்பு ஒன்றினால் மாத்திரமே கொண்டுவரமுடியும். வெறுமனே போர் இல்லாமல் இருக்கின்ற எதிர்மறையான சமாதானத்துக்கு மாறுபட்டதாக நேர்மறையான சமாதானமே அரசு தங்களைப் பாதுகாத்துப் பேணுகிறது என்று சகல மக்களும் உணரக்கூடிய சூழ்நிலையை தோற்றுவிக்கும்.